# இ. தி. மு. க. பற்றி ஆராய ஆணைக்குழு

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 138
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆனி 15 ரபி. ஆகிர் 24 திங்கட்கிழமை [29-6-70]



பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.

கேட்டு வாங்குங்கள்
சங்கு மார்க்
பித்தளைப் பிணைச்சல்கள்
இரண்டு பக்கமும் தறையப்பட்டது
கிடைக்குமிடம்:-
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/ 1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 7130

## இந்நாட்டு மக்களுக்கு

# மூன்று மாதத்துக்குள் சிறந்த பஸ் சேவை! -

## கோண்டாவிலில் அனில் முனசிங்கா

## தொழிலாளர் கமிட்டிகள் பற்றியும் பிரஸ்தாபம்

(நமது நல்லூர் நிருபர்)

"நாட்டு மக்களுக்கு சிறந்த சேவையை அளிப்பதையே இ.போ.ச. ஊழியர் ஒவ்வொருவரும் தமது கடமையாகக்கொண்டிருக்க வேண்டும். இந்நாட்டிலுள்ள இ. போ. ச. டிப்போக்களில் உறங்கிக்கிடக்கும் நூற்றுக் கணக்கான பஸ்களை வீதிகளில் ஓடவைத்து மூன்று மாதத்துக்குள் நல்லசேவையை மக்களுக்கு அளிக்க சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளோம். இதற்கான பூரண ஒத்துழைப்பை ஊழியர்கள் எல்லாரும் வழங்கவேண்டும்."

நேற்றுக்காலை கோண்டாவில் இ. போ. ச. டிப்போ ...

## 'தொழிலாளர் சபை இன்னும் நிறுவப்படவில்லை'

### இ. போ. ச. தலைவர் தகவல்

யாழ்ப்பாணம், திங்கள் விருப்பம்."

லங்கையில் ... கோண்டாவிலில் உள்ள ... பஸ் டிப்போவில் ... ளர் சபை ... இன்னும் ... வ... வில்லை. இதற்கான தொழிலாளர் ம... ல் ... சட்ட திட்டங்களை போக்கு இலங்கைப் போக்குவ... குச்

## பிரச்னைகள் தீர ஆசிரியர் சங்கம் கூறும் யோசனைகள்!

மாவிட்டபுரம். திங்கள்

"விசேட ஆசிரியர்கள் பதவி, அதிபர்கள் பதவி, கல்வி ஆலோசகர் பதவி, என்பனவற்றிற்கான நியமன ஒழுங்கீனங்களால் காலத்துக்குக்காலம் ஆசிரியர்களிடையே உண்டாகும் குறைகளை நிவர்த்தி செய்வதற்காக, இந்தப் பதவிகளுக்கெனத் தனிச்சம்பளப் படி கொடுக்கும் முறையை நீக்கி அவர்களுடைய சாதாரண சம்பளத்தோடு விசேட வேலைகட்கு உதவிப்பணம் கொடுக்கும் முறையைக் கையாளவேண்டும்."

இவ்வாறு அரசை கோரும் தீர்மானம் ஒன்று அகில இலங்கை உயர்தர பயிற் ... றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:

0 அரசியலை ஒரு அங்கீகரிக்கப்பட்ட பாடமாகவும் கொண்டு போதித்துவரும் ஆசிரிய சமுதாயத்துக்கு அரசியல் உரிமைமறுத்தல் விந்தையாகும். ஆசிரியர் தேர்தலில் நியமனம் பெற்றுப் போட்டியிடுவதற்கு நியாயமான லீவு வழங்கவேண்டும். தேர்தலில் வெற்றிகண்டு எவ்வாட்சி மன்றங்களிலேனும் அங்கத்துவம் செல்லும் போது அவருடைய சேவை, இளைப்பாற்று வேதனம் என்பன பாதிக்கப்படாத நிலையில் அவர்கள் சேவையிற் சேர்க்கப்படவேண்டும்

... படவேண்டும். இது 1-10-67 வரை நடைமுறையில் இருந்தது. தேசிய அரசாங்கத்தினாலே இழைக்கப்பட்ட அநீதி நீக்கப்பட்டு நீதிவழங்கப்படவேண்டும் எனப் புதிய அரசாங்கத்தை இச்சபை கேட்டுக்கொள்கிறது.

1925ம் ஆண்டில் இருந்ததுபோல பட்டதாரி ஆசிரியர்களுக்கும், விசேட ஆசிரிய பயிற்சிபெற்ற ஆசிரியர்களுக்கும் சம சம்பளம் கொடுக்கவேண்டும்.

கல்வி நிலையங்களில் ஏற்படும் காலியான அதிபர், உபஅதிபர், விசேட ஆசிரியர்கள் பதவிகளுக்கு நியமனம் செய்யும்போது உயர்தர பயிற்சிபெற்ற ஆசிரியர்களுக்கும் ஒரு நியாயமான விகித இடங்களை ஒதுக்கிவிடுமாறு கல்விமந்திரியை உயர்தர பயிற்சிபெற்ற ஆசிரியர் சங்கம் வேண்டுகின்றது

## அமைச்சர் கொப்பகடுவா தகவல்

கோட்டை, ஞாயிறு

இலங்கையிலுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் நடவடிக்கைகள் பற்றி விசாரணைசெய்ய ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படவிருக்கிறது. இத்தகவலைக் காணி விவசாய அமைச்சர் திரு: எச்: கொப்பகடுவா தெரிவித்தார்:

காணி, நீர்ப்பாசனத் தொழிற்சங்க ஊழியர்கள் முன் அமைச்சர், இன்று பேசினார்

இ.தி மு:க. நடவடிக்கைகள் பற்றி அரசாங்கம் தீவிர கண்காணிப்புச் செலுத்தும் என்றும் அமைச்சர் கூறினார்.

### கள்ளக்கடத்தல் விசாரணை:

## விசேஷ குழு வடபகுதி விஜயம்

### பிரதமர் உத்தரவு

வடக்கு, கிழக்கில் நடைபெற்றுவரும் கள்ளக்கடத்தல் சம்பந்தமான விசாரணைகளை மேற்கொள்வதற்காக விசேஷ குழு ஒன்று வடபகுதிக்கு வரவிருக்கிறது' இதற்கென நியமிக்கப்பட்ட திரு: லக்ஷமன் ஜெயக்கொடி தலைமையிலான குழுவில் பல உயர்தர அதிகாரிகள் அங்கம் வகிக்கின்றனர்.

விரிவான விசாரணை நடத்துவதற்கு உடனடியாக வடபகுதிக்குச் செல்லுமாறு பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகா திரு. லக்ஷயன் ஜெயக்கொடியைப் பணித்துள்ளார்.

### ஜாதிக சம்பத

## சுவீப் முடிவுகள்

கொழும்பு. ஞாயிறு

நேற்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட ஜாதிக சம்பத முடிவுகள் வருமாறு:

**முதலாவது பரிசு**

08 Z 001204 ரூ. 44.630

**இரண்டாவது பரிசு**

02 R 000408 ரூ. 44,630

**மூன்றாவது பரிசு**

03 H 000361 ரூ: 44,630

தலா ரூபா 223 சதம் 15 பெறும் அதிர்ஷ்டசாலிகள்:

| | |
|---|---|
| 05 M000335 | 04-L006392 |
| 05 M001584 | 05 T000575 |
| 08 D000527 | 03 S000037 |
| 03 Q000728 | 08 L000585 |
| 04 S000244 | 04 G001760 |
| 09 O000088 | 09 F000575 |
| 04 J000075 | 04 M001516 |
| 04 L000101 | 04 W001584 |
| 02 O001407 | 07 F000103 |
| 03 E000632 | 07 B000570 |
| 09 U001205 | 08 A001965 |
| 10 B000965 | 02 Y001517 |
| 06 J000280 | 04 N000815 |
| 08 F001814 | 05 D000031 |

| | |
|---|---|
| 03 X000141 | 05 L000552 |
| 01 D000288 | 09 F001373 |
| 01 A000083 | 07 L000609 |
| 08 Q001460 | 09 T001351 |
| 07 Y000434 | 10 X000850 |
| 02 E001866 | 09 R001216 |
| 03 B001953 | 09 R000318 |
| 05 A001324 | 04 X001070 |
| 02 A001624 | 01 D001635 |
| 07 L000597 | 04 W000192 |
| 02 T000460 | 09 U000869 |
| 10 C000925 | 03 B001722 |
| 04 Q001786 | 01 P000241 |
| 05 L000665 | 09 L001359 |
| 01 P000538 | 02 E 000420 |
| 04 U001630 | 10 T 000039 |
| 07 N000420 | 09 S001139 |
| 08 C000852 | 01 Z000192 |
| 05 Y000780 | 02 G000913 |
| 07 V001069 | 08 S000484 |
| 07 F001049 | 09 D001634 |
| 09 Q001060 | 09 C000370 |
| 02 G001945 | 08 H001899 |
| 09 M000249 | 09 P000827 |

06 J 000524

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரண சம்பளத்தோடு விசேட வேலைகட்கு உதவிப்பணம் கொடுக்கும் முறையைக் கையாளவேண்டும்.''

இவ்வாறு அரசை கோரும் தீர்மானம் ஒன்று அகில இலங்கை உயர்தர பயிற்றப்பட்ட ஆசிரியர் சங்க யாழ் கிளையின் 13-வது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

திரு எம். ஏ. கந்தையா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நிறைவேற்

...னும் அங்கத்துவம் செல்லும் போது அவருடைய சேவை, இளைப்பாற்று வேதனம் என்பன பாதிக்கப்படாத நிலையில் அவர்கள் சேவையிற் சேர்க்கப்படவேண்டும்

0 சேவையிலிருக்கும்போது பட்டதாரிப் பரீட்சையில் சித்தியெய்திய உயர்தர பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்குரிய சம்பளத்துடன் சேவைக்காலத்தில் அரைவாசிக் காலத்திற்குரிய சம்பளப்படியேற்றம் வழங்கப்

...மனம் செய்யும்போது உயர்தர பயிற்சிபெற்ற ஆசிரியர்களுக்கும் ஒரு நியாயமான விகித இடங்களை ஒதுக்கிவிடுமாறு கல்விமந்திரியை உயர்தர பயிற்சிபெற்ற ஆசிரியர் சங்கம் வேண்டுகின்றது

சகலவிதமான பகிரங்க பரீட்சைகள் உயர்தரபயிற்சி பெற்ற ஆசிரியர்கள் எடுப்பதற்கு சகல வாய்ப்புகளையும் அரசாங்கம் அளிக்கவேண்டும்.

# கல்விக் குழப்ப நிலை அடுத்தமாதத்துக்குள் சீராகும்!

## கல்வி அமைச்சர் தகவல்

கோட்டை, திங்கள்

நாட்டின் கல்வி முறையில் ஏற்பட்டுள்ள குழபப நிலை அடுத்தமாத முடிவிற்குள் திருத்தியமைக்கபபடும்.

கல்வியமைச்சுக் காரியாலயத்தில் நேற்றுக்காலை நடந்த செய்தி நிருபர்கள் மகாநாட்டில் மேற்கண்ட தகவலை கல்வியமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் தெரிவித்துள்ளார்'



இம் மகாநாட்டில் கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆசிரியர் இடமாற்றங்கள் சம்பந்தமாக ஏற்பட்டுள்ள பிரச்னைகள் அடுத்தமாத முடிவிற்குள் தீர்த்து வைக்கப்படும்.' 'கனிஷ்ட பல்கலைக்கழகங்கள் நிறுவுவது பற்றி கல்வி ஆலோசகர் குழுவின் முடிவைதான்எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்:

நாட்டின் கல்விச் சேவையின் நிர்வாகத்தில் சீர்கேடு இருப்பதைத் தான்அறிவர் எனவும் நிர்வாகத்தைச் சீர்திருத்த கல்வி பரிசோதகர்கள் உதவியை தான் நாடியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

## பாகிஸ்தான் தூதரகம் முன் ஆர்ப்பாட்டம்

புதுடில்லி, ஜூன் 28

நற்றுக் காலை பாகிஸ்தான் ஸ்தானிகராலயத்தின் முன்பாக ஜனசங்க உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

கிழக்கு பாகிஸ்தானில் இருந்து இந்துக்கள் பெரும் பாலானோர் குடிபெயர்ந்து வருவதற்கு ஆட்சேபம் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்துக்களுக்குப் பாகிஸ்தான் முஸ்லிம்கள்கொடுமை செய்வதாக ஆர்ப்பாட்டக்காரர் குற்றஞ்சாட்டினர்.

## நாட்டை காக்கும் நிதிக்கு யாழ். கிராமசேவையாளர் ஒரு நாள் சம்பளம்!

வல்வெட்டித்துறை, ஞாயிறு

யாழ். மாவட்ட கிராம சேவையாளர் சங்கக் காரியக் கமிட்டிக் கூட்டம் திரு. கு. இராமச்சந்திரா தலைமையில் யாழ். வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் ஒரு நாள் சம்பளத்தை 'நாட்டைக் காப்பாற்றும் நிதிக்கு' ஒவ்வொரு கிராம சேவையாளரும் கொடுத்து உதவவேண்டும் என்ற தலைவரின் கோரிக்கையைச் சபையினர் ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர்.

வல்வெட்டித்துறை பட்டினசபை ஊழியர்கள் ஒரு நாள் சம்பளத்தையும், அச்சபையின் உறுப்பினர்கள் ஒரு நாள் வருமானத்தையும் 'நாட்டைக் காப்பாற்றும் நிதி'க்கு கொடுத்துதவ முன்வந்துள்ளனர்.

## ராஜாஜி வாழ்க்கை திரைப்படமாகிறது

சென்னை, ஜூன் 29

பாரதத்தின் அரசியல் மூதறிஞரான ராஜகோபாலாச்சாரியாரின் வாழ்க்கை வரலாறு விரைவில் திரைப்படமாக விருக்கிறது.



தமிழக அரசின் திரைப்படப் பிரிவு ராஜாஜியின் வாழ்க்கைவரலாற்றைத் திரைப்படமாக்க நடவடிக்கைகள் மேற்கொண்டுவருகிறது. இதற்கான ஆரம்ப வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது: இப்படத்திற்காக விஷயங்கள் துரிதமாக மேற்படி திரைப்படப் பிரிவினால் சேகரிக்கப்படுகின்றன.

வேலணை ஞாயிறு

தீவுப்பகுதியில் பல ஆண்டு சேவை செய்த நோயாளர் படகு இரண்டு ஆண்டுகளுக்கு முன் திருத்தும் பொருட்டு கொண்டு சென்று திருப்பி அனுப்பப்படாததால் பண்டித் கா. பொ, இரத்தினம் தொடர்பு கொண்டதையடுத்து இம்மாதம் அல்லது யூலை முடியுமுன் திருப்பி அனுப்பி வைக்கப் படுமென சுகாதார அமைச்சின் நிரந்தர

## இ. போ. ச. தலைவர் தகவல்

யாழ்ப்பாணம், திங்கள்

'லங்கையில் தொழிலாளர் சபைகள் இன்னும் நிறுவப்படவில்லை. இதற்கான சட்டதிட்டங்களை போக்குவரத்து அமைச்சர் திரு. லெஸ்லி குணவர்த்தனு தயாரித்து வருகிருர். இவை மந்திரிசபையின் அங்கீகாரம் பெற்றபின் அமுலுக்கு கொண்டுவரப்படும். இன்னும் இரண்டு மாதத்திற்குப் பின்னரே தொழிலாளர் கமிட்டிகள் நிறுவப்படும். இச்சபைகளில் நேர்மையானவர்கள், கண்ணியமானவர்கள் இடம்பெற வேண்டும் என்பது என் விருப்பம்.''

கோண்டாவிலில் உள்ள யாழ். பஸ் டிப்போவில் தொழிலாளர் மத்தியில் இலங்கைப் போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. அனில் முனசிங்கா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு அனில் முனசிங்கா மேலும் கூறியதாவது: பஸ் தொழிலாளர் சங்கங்களுக்கும், தொழிலாளர் சபைக்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு, பஸ் தொழிலாளர் சங்கம், உறுப்பினர்களின் நலனுக்குப் பாடுபடும் தொழிலாளர் சபை, நிர்வா

(4-ம் பக்கம் பார்க்க)

## ஒரு அறையில் 12 பேர் 80பேருக்கு ஒருமலசலகூடம்

### வாடகை கட்டுப்பாட்டு குழு அறிக்கை

கொழும்பு, ஞாயிறு

ஒரு யன்னல்கூட இல்லாத அறையில் 12பேருக்கு அதிகமானோர் வாழ்ந்துவருகிருர்கள். ஒரு மலசல கூடத்தை 80 பேர்வரை பாவிக்கின்றனர்.

இத்தகவலை வாடகை கட்டுப்பாட்டு விசாரணைக்குழு அரசாங்கத்துக்கு சுட்டிக்காட்டியுள்ளது வீடமைப்பு அமைச்சர்திரு. பீட்டர்கெனமன் நியமிக்கப்பட்ட இக்குழு தனது விசாரணைகளின் முதல் அறிக்கையை நேற்று சமர்ப்பித்தது.

சில அறைகளுக்கு வெளிச்சம் போதியதாக இருக்கவில்லை. அவ்வறைகளுக்கு வெள்ளையடித்துப் பலகாலமாகியும் திரும்ப வெள்ளை அடிக்கப்படவில்லை. ஒரு இடத்தில் மூன்று மலசல கூடங்கள் 300 பேர்களினல்பாவிக்கப்பட்டதையும். தண்ணீர்க் குழாய்கள் துருப்பிடித்திருப்பதையும்இவ்விசாரணைசபை கண்டு அதிர்ச்சி அடைந்தது

'வாடகை வீட்டுச் சொந்தக்காரர், வாடகை பெற்றுக்கொண்டு அதற்குரிய றிசீற்கள் கொடுக்காமல் அரசாங்கத்துக்கு கள்ளக் கணக்கு கொடுத்து வந்திருக்கின்றனர்.

இதுபற்றி பொலிசாரின் உதவியைப் பெறும் நோக்கமாக பொலிஸ் இன்பெக்டர் ஜெனரலோடு இச்சபை ஆலோசனை செய்யவிருககிறது. (சி)

## சோலைவரி கி. ச. நடவடிக்கை

புங்குடுதீவு, திங்கள்

புங்குடுதீவு கிராமசபைக்குட்பட்ட பகுதிகளில் சோலை வரி கட்டாதவர்களின் உடைமைகள் வெலியாத்தில் விற்பனைசெய்யப்படவிருக்கிறது. நேற்று நடைபெற்ற கிராமசபைக் கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது. தலைவர் திரு. க. மதியாபரணம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது

மாதம் ஒருமுறை வெலியாத்து நடத்துவதெனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இதற்கென நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. கிராமசபை மராமத்து வரி அதிகாரி திரு. செ. தி. மகேஸ்வரன் இதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்.

காரியதரிசியினல் பதில் அனுப்பப்பட்டுள்ளது.

...ளோம். இதற்கான பூரண ஒத்துழைப்பை ஊழியர்கள் எல்லாரும் வழங்கவேண்டும்.''

நேற்றுக்காலை கோண்டாவில் இ. போ. ச. டிப்போ ஊழியர்சள் மத்தியில் உரை நிகழ்த்தியஇலங்கை போக்குவரத்துச்சபைத் தலைவர் திரு அனில்முனசிங்கா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நேற்றுக்காலை 8-30 மணிக்கு விமானத்தில் பலாலி வந்துசேர்ந்த திரு. அனில் பருத்தித்துறை பஸ் டிப்போவுக்குச்சென்று, அங்குள்ள தொழிற்சங்க பிரதிநிதிகளையும், ஊழியர்களையும் சந்தித்துப் பேசினர்.

சமசமாஜக் கட்சிப்பிரமுகர்கள் திரு. ஆர். ஆர். தர்மரத்தினம், திரு. ஏ. விசுவநாதன் ஆகியோருடன், பருத்தித்துறை எம். பி. திரு. துரைரத்தினம், உடுப்பிட்டி எம், பி. திரு. கே ஜெயக்கொடி ஆகியோரும் பருத்தித்துறை டிப்

(4-ம் பக்கம் பார்க்க)

## பதவி ஏற்பார்

வாஸிடன், ஜூ 28

மெர்குரி விண்வெளி திட்டத்தின் முதல் ஏழு விண்வெளி வீரர்களில் ஒருவரான காரிடன் கூப்பர் தேசிய வானவெளி ஸ்தாபனத்திலிருந்து விலகி ஜூலை 31-ம் திகதி ஒரு வர்த்தக நிறுவனத்தில் பதவி ஏற்பார் என அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படடது.

| | |
|---|---|
| [illegible] | [illegible] |
| 04 L000101 | 04 W001584 |
| 02 O001407 | 07 F000103 |
| 03 E000632 | 07 B000570 |
| 09 U001205 | 08 A001965 |
| 10 B000965 | 02 Y001517 |
| 06 J000280 | 04 N000815 |
| 08 F001814 | 05 D000031 |
| 03 M001722 | 07 S000326 |
| 08 Y000557 | 05 G001057 |
| 07 E000997 | 03 J001842 |
| 17 Y000544 | 06 B001399 |
| 09 J000436 | 03 W001571 |
| 08 T001132 | 05 M001083 |
| 06 U000453 | 05 G000634 |
| 04 T001218 | 04 C000117 |
| 02 B001749 | 09 H000562 |
| 05 P001307 | 02 Q000648 |
| 06 O001959 | 03 K000547 |
| 02 Q000021 | 10 E000247 |
| 03 N001050 | 02 O001286 |
| 06 R000198 | 03 O001029 |
| 03 C000329 | 03 P001794 |
| 08W000855 | 01W000579 |
| 05 R000991 | 08 V000619 |
| 02 E001341 | 04 S001882 |
| 03 D000059 | 04C 000689 |
| 04 P001002 | 01 U001889 |
| 05 Q000233 | 04 J000447 |
| 01 C001285 | 06 A000843 |
| 02 L000891 | 02 Z001494 |
| 09 Y001098 | |
| 01 M000727 | 03 Z000573 |
| 08 E000674 | 06 Y000919 |
| 08 D000135 | 05 G001131 |
| 02 B000680 | 09 X000875 |
| 02 N001933 | 02 U000318 |
| 05 P000430 | 02 K001506 |

| | |
|---|---|
| 07 V001069 | 08 S000484 |
| 07 F001049 | 09 D001634 |
| 09 Q001060 | 09 C000370 |
| 02 G001945 | 08 H001899 |
| 09 M000249 | 09 P000827 |
| 06 J 000524 | |
| 05 Q000686 | 07 A001592 |
| 04 Y000306 | 06 J001504 |
| 08 S000579 | 03 O001563 |
| 01 Q001558 | 05 T001183 |
| 01 T000437 | 07 Y001269 |
| 06 O001825 | 03 H000170 |
| 06 G000927 | 01 Z000230 |
| 02 L000866 | 07 S000991 |
| 08 L001147 | 09 S000380 |
| 03 H001874 | 02 B000275 |
| 07 N000998 | 02 X000383 |
| 05 T001578 | 02 Y000846 |
| 08 E001342 | 09 Y001622 |
| 09 Z000416 | 07 E001773 |
| 08 Q000299 | 06 N001679 |
| 06 V001357 | 08 G001935 |
| 02 M000104 | 07 A001979 |
| 04 B000813 | 06 T001293 |
| 09 H001281 | 06 D001729 |
| 06 V001224 | 02 H000895 |
| 07 S000966 | 04 M001004 |
| 03 Y000820 | 07 L000389 |
| 02 G000412 | 01 Z001775 |
| 06 R001075 | 07 R001303 |
| 09 E000339 | 09 Q001730 |
| 06 Y001499 | 05 F000257 |
| 06 L001780 | 06 Y001792 |
| 07 Q000420 | 02 Y000061 |
| 01 W000820 | 09 R000495 |
| 01 S000709 | 08 C000919 |
| 06 R001934 | 02 E000778 |
| 05 S000268 | 08 P001865 |

# நானும் பிரதமராக முடியும்!

—செனட்டர் நடராஜா

## ரெஜிபெரேரா - நடராசா வாக்குவாதம்

(நமது கொழும்பு நிருபர் பெரி. சுந்தரலிங்கம்)

'ஸ்ரீமாவோ பண்டாரநாயகா போன்றே நானும் இந்த நாட்டின் பிரஜை. அவர் பிரதமராக முடியுமென்றால் நான் ஏன் பிரதமராக முடியாது என்று கேட்டார் செனட்டர் சு, நடராசா' செனட்சபையில்.

சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதம் இன்று முதலாவது நாளாக செனட்சபையில் நடைபெற்றது. தமிழரசுக்கட்சியின் திருத்தப்பிரேரணைகளை செனட்டர் நடராசாசமர்ப்பித்துப் பேசினர்.

செனட்டர் நடராசாவுக்கும் செனட்டர் றெஜிபெரேராவுக்குமிடையில் ஒரு சந்தர்ப்பத்தில் கடுமையான வாக்குவாதம் ஏற்படட போதேசெனட்டர்நடராசா மேற்கண்டவாறு கேட்டார். 'ஸ்ரீமாவோ பிரதமராக இருக்க முடியுமானல் தமிழனுகிய எனக்கு பிரதமராக வரமுடியாது? எனக்குத் தகைமை உண்டு; என்னல் பிரதமராக வரமுடியும்' என்று செனட்டர் நடராசா கூறினர்.

சமஷ்டி ஆட்சி, நீதிமன்றத்தில் தமிழ்மொழி, தாய்மொழி போதனமொழி ஆகிய திருத்தப் பிரேரணைகளை செனட்டர் நடராசா சமர்ப்பித்தார் அவர் அப்போது பேசியதாவது:

'கடந்த 19-ம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் பிரதமர் ஸ்ரீமாவோ பேசுகையில் 'சிங்கள மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதாக கூறியுள்ளார். அவரது பேச்சிலிருந்து தமிழ் மக்களுக்கு குறை இல்லை என்பது போல் அமைந்துள்ளது தமிழ் மக்களின் குறைகளையும் நிவர்த்தி செய்து, அவர்களும் ஒற்றுமையாக வாழ வழிவகுப்பதினல் சமஷ்டி அரசு வேண்டும். சிங்கள மக்களின் பூரண நம்பிக்கை பெற்றுள்ள மக்கள் அரசாங்கம் ஏனைய கட்சிகளுக்குப் பயப்படாமல் இதை நிறைவேற்ற முடியும்.

காலஞ்சென்ற பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா இன்று இருந்திருந்தால் நாம் பிரதேச சபையை பெற்றிருக்க முடியும்.

'பெற்றோர் விரும்பிய மொழியில் கல்வி கற்கலாம் என்ற அரசாங்கத்தின் திட்டம் இனத்தை அழிக்கும் ஒரு சூழ்ச்சி என்றே கூறலாம். நீதிமன்றங்களில் சிங்கள மக்களுக்கு கொடுக்கப்படவிருக்கும் உரிமைகள் போன்று தமிழ் மக்களுக்கும் வழங்கப்படவேண்டும் தமிழ் மக்களுக்கு இது நிராகரிக்கப்படுமானல், மலை நாட்டுத் தமிழரை நாடு கடத்துவதுபோல் எம்மையும் ஏன் நாடுகடத்த மாட்டீர்கள்?

### தமிழ் மந்திரி

'தமிழர் ஒருவர் மந்திரி சபையில் இடம்பெற்றுள

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அறிவித்தல்

ஆ. சி. முருகேசு ஆகிய நான் அறியத்தருவது 26-6-70-ல் வடமாகாண அரசாங்க அதிபருக்கு கிளிநொச்சியில் இருக்கும் பராசக்தி படமாளிகையின் பொழுதுபோக்கு பார் லைசென்சை புதுப்பிக்க விண்ணப்பித்துள்ளேன் இதன் முடிவு திகதி 30-9-71.

ஆ. சி. முருகேசு,
2333 விண்ணப்பதாரர்.

## வரி விளம்பரம்

### தேவை

இஞ்சினியரின் நிருவாகத்தின்கீழ் தியேட்டர் கட்டுவதற்கு கட்டிட வேலை தெரிந்த ஆட்கள் தேவை. விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். பி. எஸ். மார்க்கண்டு, தச்சன்கலட்டி, ஆவரங்கால், புத்தூர். 3131

கைத்தறிக்குரிய 100-ம் நம்பர் றீட்ஸ் (100 S Reeds) நல்ல நிலைமையிலுள்ளன வாய்த் தேவைப்படுகின்றன. விற்பனவுக்கு வைத்திருப்போர் கீழ்க்காணும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும் - மனேஜர், வசந்தபுரம் சில்க்ஸ் 7, 2-ம் ஒழுங்கை, பிரவுண்வீதி, யாழ்ப்பாணம். 3130

காஷியர்கள்:

யாழ்ப்பாணம் பஸ்நிலையப் பக்கமிருக்கும் சன்லைட் றைக்கிளீனேர்ஸ் ஸ்தாபனத்திற்கு காலை 7 மணி தொடக்கம் பகல் 12-30 மணி வரை ஒருவரும், பிற்பகல் 12-30 மணி தொடக்கம் மாலை 7 மணி வரை ஒருவரும் இரு காஷியர்கள் தேவை. பிணைப்பணம் கட்டக்கூடியவர்கள் விண்ணப்பிக்கவும். சாயிறைக்கிளீனேர்ஸ், வெலிங்டன் தியேட்டர் சந்தி, யாழ்ப்பாணம். 3132

வீட்டு வேலைகளுக்கு உதவியாக ஒரு பெண்பிள்ளை தேவை. தகுந்த சம்பளமும் வசதிகளும் உண்டு. எழுதவும். 44/4 A, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். 3129

### விற்பனைக்கு

தராசு:

எமது சங்கப் பாவிப்பிலிருந்த 5 அந்தர் நிறுக்கக்கூடிய தராசொன்று விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் 13-7-70க்கு முன் தொடர்பு கொள்ளவும். போயாதினங்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் பார்வையிடலாம். தலைவர், நுணசை ப. நோ. கூ. சங்கம், மாதகல். 2152

ஆட்சிமன்றத்திலே . . . . .

நமது சபை நிருபர்
பெரி சுந்தரலிங்கம்


# 'நல்லெண்ணம் இருந்தால் சட்டங்கள் தேவையில்லையே'!

— திருமலை நேமிநாதன்

மூன்றாவது நாள் நடந்த அரியாசன உரை மீதான விவாதம் மிகவும் சுவையாக இருந்தது!

முன்னெப்போதும் இல்லாதவகையில் இப்போதெல்லாம் தினசரி ஆட்சிமன்ற பார்வையாளர் கலரி இரவு பகல் எந்நேரமும் நிரம்பி வழிந்துகொண்டிருந்தது. உள்ளே செல்ல 'ரிக்கற்' கிடைக்காதா என்று ஏக்கப் பார்வையுடன் வரவேற்பு மண்டபத்தில் எந்நேரமும் ஏராளமான பேர் நிறைந்து நிற்கின்றனர்.

தங்களுடைய பிரதிநிதிகள் என்ன பேசுகிறார்கள்? எப்படிப் பேசுகிறார்கள்? என்பதை நேரில் பார்த்தறிய மக்களின் ஆர்வம் அதிகரித்திருப்பதைப் போலவே, அவர்கள் பேசியதை வரிக்குவரி படித்து மகிழ, விவாதித்துத்தெளியவும் அக்கறை மேலோங்கியுள்ளது என்பதை நாளாந்தம் அதிகரித்துவரும்



'ஹன்சாட்' (ஆட்சிமன்ற விவாதங்களடங்கிய இதழ்) விற்பனையிலிருந்து அறிய முடிகிறது.

இன்றைய விவாதத்திலே தமிழரசுக்கட்சி எம். பி.க்களான திரு. சி எக்ஸ் மார்டின், எஸ். தங்கத்துரை பி நேமிநாதன், தமிழ்க் காங்கிரஸ் எம். பி.க்களான கே. தியாகராஜா, சி. அருளம்பலம், நியமன எம். பி. திரு. எம் சி சுப்பிரமணியம், அமைச்சர் கொப்பேகடுவ உட்படப் பலர் பங்கு பற்றினர்.

தமிழ்க்காங்கிரஸ் தலை

இவ்வேளையில் புள்ளிவிபரங்களைப் பற்றி ஒரு விஷயம் நினைவுக்குவருகிறது. பொய்களிலே மூன்றுவகைப் பொய்களுண்டு. ஒன்று பொய், இரண்டாவது படு பொய், மூன்றாவது புள்ளி விபரம். இப்படி வேடிக்கையாகச் சொல்வதுண்டு — எந்த ஒரு விஷயத்தையும் ஆதரிக்கின்றவர்களும் எதிர்க்கின்றவர்களும் புள்ளி விபரங்களையே துணைக்குத் தேடுவார்கள். வாசகர்களும் பொதுமக்களும் தான் யார் சொல்வது உண்மை. சரி என்று தெளிவாகத் தெரியாது மண்டையைப் போட்டு உடைத்துக்கொள்வார்கள்

தமிழரசுக் கட்சி மார்ட்டின் இப்படிச் சொன்னால், தமிழ்க்காங்கிரஸ் கட்சி தியாகராஜா (வட்டுக்கோட்டை) சும்மா இருப்பாரா? தமிழரசுத்தளபதி, தமிழரசுக்கட்சி செயலாளரையே தோற்கடித்தவராயிற்றே-அவரும் தனது பேச்சின்போது புள்ளிவிபரங்களைத் தந்தார்:

1970 தேர்தலிலே தமிழரசுக்கட்சிக்குக் கிடைத்த மொத்த வாக்குகள் 2,43,366 தானும். ஆனால் தமிழரசுக்கட்சிக்கு எதிராக கிடைத்த வாக்குகளோ

யும் தேர்தல் களத்திலே பலிகொடுத்துள்ளன. ஆனால் அப்பொழுது எல்லாம் ஏதோபொருளாதாரக் காரணத்தைக் காட்ட முன் வருபவர்கள், தமிழரசுக் கட்சித்தலைவர்கள் தோற்ற போதுமட்டும் வகுப்பு வாதத்தைக் காரணமாக காட்ட முன்வருவது விந்தையாக இருக்கிறது'' என்பது தான் தங்கத்துரையின் பதில்!

சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவரும், நியமன உறுப்பினருமான திரு. எம். சி. சுப்பிரமணியம் ''வட கீழ் மாகாணங்களில் வாழுகின்ற ஏறத்தாழ 5 லட்சம் உரிமை குறைந்த சிறுபான்மைத் தமிழர்களின் சார்பில் அச்சமூகத்துக்கு நியமனம் அளித்தமைக்காக பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவுக்கும், அவர்தம் அமைச்சரவை சகாக்களுக்கும் நன்றி தெரிவித்து'' தனது கன்னிப் பேச்சை ஆரம்பித்தார்.

''மனித உரிமையற்ற முறையில், உயர் ஜாதிக்காரர்களின் கொடுமைகள் பலவற்றை அனுபவித்துக் கொண்டு, பன்னூற்றாண்டுகளாக வாழ்ந்துவந்தவர்கள், தங்களுடைய உரிமைகளுக்கு கிளர்ந்தெழுந்த


மும் இருக்கிறது'' என்று தொடங்கி ''1926ம் ஆண்டு காலஞ்சென்ற பண்டாரநாயகா அரசுகட்டில் ஏறிய பின்னர்தான் சிறுபான்மைத் தமிழர்கள் ஓரளவுக்கேனும் நிவாரணம் பெற முடிந்தது'' என்றார் எம். சி. சுப்பிரமணியம்.

1947ல் யாழ்ப்பாணம் வில்லூன்றி மயானத்தில் சிறுபான்மைத் தமிழர் ஒருவரின் பிணத்தைத் தகனம் செய்யக்கொண்டு சென்ற போது, ஜாதி வெறிபிடித்தவர்கள் துப்பாக்கிப்பிரயோகம் நடத்தி, முதலி சின்னத்தம்பியின் உயிரைப் பலியெடுத்தபோது. அப்போதைய தமிழ்க் கட்சித் தலைவர்களோ, நகரசபைத் தலைவர்களோ அதைப்பற்றிய பேச்சே எடுக்காமல் இருக்க, அன்று உள்ளூராட்சி அமைச்சராகஇருந்த காலஞ்சென்ற பண்டாரநாயகா யாழ்ப்பாணத்திற்கு நேரில் வந்து, தக்க உதவிகள் செய்ததை நினைவு கூர்ந்த திரு. எம். சி. சுப்பிரமணியம் அன்றிலிருந்து அவருக்குச் சிறுபான்மைத் தமிழர் சமூகம் நன்றிக்கடன்பட்டிருப்பதாகக் கூறி



பேச வல்லவர் இவர். இவர் பேச ஆரம்பித்தால் எதிர்த்தரப்பிலிருந்து அடிக்கடி குறுக்கீடுகளை நிச்சயமாக எதிர்பார்க்கலாம். அவற்றையெல்லாம் சாதுர்யமாகச் சமாளித்துவிடக்கூடியவர்தான். என்றாலும் சில சமயங்களில் சிக்கிக்கொள்வதுமுண்டு

'மக்கள் குரலே மகேசன் குரல்' என்ற அடிப்படையில் 1970 தேர்தலின் முடிவை யு. என். பி.யினர் முழுமையாக ஏற்றுக்கொள்வதாகக் கூறிப் பேச்சை ஆரம்பித்த திரு ஹமீத், நம்



நாடு சுதந்திரம் பெற்றபின் நடைபெற்ற தேர்தல்களிலேயே 1970ம் ஆண்டு

மேலோங்கி, மீண்டும் உணர்ச்சியின் அடிப்படையில்தான் தேர்தல் நடைபெற்றது.

1960 தேர்தல் பண்டாரநாயகா துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானதைத் தொடர்ந்துஇடம்பெற்றது. உணர்ச்சிகளே தேர்தலை ஆக்கிரமித்திருந்தது.

1965 தேர்தலோ திரு சி. பி. டி. சில்வா தனது குழுவினருடன் கட்சி மாறி அன்றைய அரசாங்கத்தைத் தோற்கடித்ததன் நிமித்தம் நடைபெற்றது. மீண்டும் உணர்ச்சிகள் தாம் தேர்தல் களத்திலே கட்டவிழ்த்துவிடப்பட்டன.

ஆனால் 1970ம் ஆண்டு தேர்தல்தான், பொருளாதாரக் கொள்கைகளுக்கிடையிலான போட்டியாக அமைந்தது. இதிலே யு. என் பி யின் பொருளாதாரக் கொள்கையை மக்கள் ஏற்கவில்லை மாறாக, ஐக்கிய முன்னணியின் கொள்கையையும் வேலைத்திட்டத்தையுமே ஏற்றனர்.

இப்படியாகத் தேர்தல் வரலாற்றைச் சொல்லிக் கொண்டு வந்த திரு. அமீது 1965-க்கும், 1970-க்கும் இடைப்பட்ட கால வரலாற்றைப்பற்றி சிறு விளக்கம் கொடுக்க முற்பட்டபோது, ஆளும் தரப்பு எம். பி.க்களின் எக்கச்சக்கமான குறுக்கீடுகளுக்குப் பதில் சொல்லித் தப்பவேண்டியேற்பட்டது.

அமீது: 'யு. என். பி. தன்னுடைய ஆட்சிக் காலத்தில் வகுப்பு வாதத்தையும். இனவாதத்தையும் முறியடிக்க வெகுவாகப்பாடுபட்டது.'

அரசாங்க எம். பி: முதலாளித்துவத்தையும், ஏகாதிபத்தியத்தையும் எதிர்க்கத் துணியவில்லையே! (சிரிப்பு)

அமீது: 1970 தேர்தலிலே வகுப்புவாதத்தை அடிப்படையாகக்கொண்டு இயங்கிய சக்திகள் அனைத்தும் முற்றாக அழிக்கப்பட்டன. ராஜரத்ன தம்பதிகள் இல்லாமற் போனார்கள்; ஆர் ஜி. சேனநாயக்காவும் அவர்தம் 50 சகாக்களும் தோல்வியடைந்தனர்!

அரசாங்க எம். பி.க்கள்: தமிழரசுக்கட்சி என்னவாயிற்று!

அமீது: தமிழரசுக்கட்சியின் தலைவரும், செயலாளரும், பொருளாளரும் படுதோல்வியடைந்தனர். தமிழ்க்காங்கிரஸின் தலைமைப்பீடமும் தோல்வியடைந்தது...

அரசாங்க எம். பி: யு. என். பி யின் பதினொரு அமைச்சர்களும் மண்ணைக் கவ்வினார்கள்! (பெருஞ் சிரிப்பு).

அமீர்: பட்டிருப்புத் தொகுதியிலே தமிழரசுக் கட்சித் தலைவரைத் தோற்கடித்தது ஒரு பெரிய விஷயம்!

ரத்னதேசப்பிரிய சேனநாயகா: மின்னேரியாத் தொகுதியில் (சி. பி. டி. சில்வாவின் தொகுதி) நடைபெற்றது எப்படிப்பட்ட விஷயம்?


அமீது: அதுவும் மிக மிக முக்கியமான காரியம்தான்!

இந்த வேளையில் சபாநாயகர் திரு. ஸ்டான்லி திலகரத்ன தலையிட்டு, குறுக்கீடுகளை ஒருவாறு குறைத்தார்.

## தர்க்கரீதியாக வாதிடும் தமிழரசுத் தங்கத்துரை!

3,75,849 வாக்குகளாம். எனவே, தமிழரசுக்கட்சியின் அதாவது சமஷ்டிக் கட்சியின் சமஷ்டிக் கொள்கையைத் தமிழ் பேசும் மக்கள் ஆதரிக்கவில்லை என்றுதானே சொல்ல வேண்டும்? என்று கேட்டார் திரு. தியாகராசா.

திருவாளர்கள் மார்ட்டினும், தியாகராசாவும் தங்கள் கன்னிப் பேச்சுக்களை



ணர்.

தமிழரசுக்கட்சியும், தமிழ் காங்கிரசும் சிறுபான்மைத் தமிழரின் உரிமைகளு[illegible]ாக வாதாடுவதாகச் [illegible]ன போதிலும், சிறுபான்மைத் தமிழர்கள் உரிமைப் போராட்டங்களைத் தாங்க[illegible] தொடங்கிய பின் [illegible] வாயளவில் இவர்கள் உதவிசெய்ய [illegible]ரு [illegible]

## மேயர் மீது எம். பி. வழக்கு!

அம்பாறை, ஞாயிறு

மட்டக்களப்பு முதலாவது ஆட்சிமன்ற உறுப்பினரும், மட்டக்களப்பு மாநகர சபையில் 11-ம் வட்டார உறுப்பினருமான திரு, செ. இராசதுரை, மட்டக்களப்பு மேயர் திரு. ஜே. எஸ், திசவீரசிங்கம் இப்பகுதி தேர்தல் அதிகாரி திரு. ஒஸ்டின் பெர்னன்டோ ஆகியோர் மீது உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

இம்மனுவில் தான் இன்னமும் 11-ம் வட்டார அங்கத்தவர் என மேயர் ஏற்றுக்கொள்ள வேண்டுமெனவும் வழக்கு செலவு தொகையை பிரதிவாதிகள் இருவரும் தனக்குத்தர வேண்டுமெனவும், இதற்கு நீதிபதி உத்தரவிடவேண்டுமெனவும், மேலும் கேட்டுள்ளார். அவர் அம்மனுவில் தான் தொடர்ந்தும் அங்கத்தவராக இருப்பதக்குரிய காரணங்களை எடுத்துக் காட்டியுள்ளார்.

இம்மனுவை ஏற்றுக் கொண்ட நீதியரசர் திரு. வீரமந்திரி மேயர் திசவீரசிங்கத்திற்கும், ஒஸ்டின் பெர்னன்டோவிற்கும் நோட்டிஸ் அனுப்ப உத்தரவிட்டுள்ளார்.

இவ் வழக்கில் திரு. செ. இராசதுரையின் சார்பில் வழக்கறிஞர் திரு. எம். திருச்செல்வம், கியூ. ஸி., திருவாளர்கள்: சண்முகநாதன், கே. கனகாஸ்வரன் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜராகிறார்.

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ஜெய்சங்கர்—கே. ஆர். விஜயா
நாகேஷ்—வி. கே. ராமசாமி
நடித்த
பெண்ணை வாழ விடுங்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வோர் 13-7-70க்கு முன் தொடர்பு கொள்ளவும். போயாதினங்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் பார்வையிடலாம். தலைவர், நுணசை ப. நோ. கூ. சங்கம், மாதகல். 2152


FOR SALE

Two Singer foot Machines Rupees 350/-& 575/-S, G. Ariyams, NearChurch, Kokuvil 3127


## சிவானந்த வித்தியாலயம் சாம்பியனாகியது

வாழைச்சேனை, ஞாயிறு

மட்டக்களப்பு மாவட்டப் பாடசாலைகளுக் கிடையே நடாத்தப்பட்ட கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கல்லடி உப்போடை சிவானந்த வித்தியாலயம் சாம்பியனாகியது.

இப்போட்டியில் மட்டக்களப்பைச் சேர்ந்த பல பிரபல பாடசாலைகள் பங்குபற்றின.

## அரசாங்க அதிபர்

கொழும்பு, ஞாயிறு

இலங்கையிலும் வெளிநாட்டிலும் பத்திரிகையாளராக இருந்த திரு. டபிள்யூ. லயனல் பெர்னாண்டோ திருகோணமலை அரசாங்கஅதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் ஜுலை 4-ந்திகதி அங்கு தமது பதவியை ஏற்பார்.

கே. தியாகராஜா, சி. அருளம்பலம், நியமன எம். பி. திரு. எம் சி சுப்பிரமணியம், அமைச்சர் கொப்பேகடுவ உட்படப் பலர் பங்குபற்றினர்.

தமிழ்க்காங்கிரஸ் தலைவரைத்தோற்கடித்த யாழ்ப்பாண எம். பி. திரு. சி எக்ஸ் மார்ட்டின் ஆட்சி மன்றத்தில் தனது கன்னிப் பேச்சை ஆங்கிலத்தில் நிகழ்த்தினார்

தமிழரசுக்கட்சியின் செல்வாக்கு மக்கள் மத்தியிலே 1956-ம் ஆண்டிலிருந்து படிப்படியாகவளர்ச்சியடைந்து வந்திருக்கிறது; எனவே அதுதான் தமிழ்பேசும் மக்களின் பெரும்பான்மையான ஆதரவைப்பெற்ற கட்சி என்ற தனது வாதத்தை நிலைநாட்ட பின்வரும் புள்ளி விபரங்களைக் காட்டினார் மார்ட்டின்!

1956-ல் வென்ற ஆசனங்கள் 10, வாக்குகள் 142,000 1960-ல் வென்ற ஆசனங்கள் 15, வாக்குகள் 176,000. 1960 ஜுலையில் ஆசனங்கள் 16, வாக்குகள் 218,000, 1965-ல் வென்ற ஆசனங்கள் 14, வாக்குகள் 217,000, 1970-ல் வென்ற ஆசனங்கள், 13 வாக்குகள் 245,000

எனவே 50சதவிகிதமான வாக்குகளைப்பெற்று 60 சதவிதமான ஆசனங்களைக் கைப்பற்றிய தமிழரசுக்கட்சிதான் தமிழ்மக்களின் கட்சி!—இது மார்ட்டினின் வாதம்.

கொள்கையைத் தமிழ் பேசும் மக்கள் ஆதரிக்கவில்லை என்றுதானே சொல்லவேண்டும்? என்று கேட்டார் திரு. தியாகராசா.

திருவாளர்கள் மார்ட்டினும், தியாகராசாவும் தங்கள் கன்னிப் பேச்சுக்களை ஆங்கிலத்தில் நிகழ்த்த பாடல்பெற்ற ஸ்தலமான திருக்கோணமலை எம். பி. நேமிநாதனோ, "தமிழன் என்ற முறையில் தமிழில் பேசவிரும்பினேன்; ஆனால் நான் பேசுவதை அரசாங்க தரப்பு எம். பி.க்களுக்கு விளங்கவைக்க வேண்டும் என்பதால் தமிழன்னைக்கு அஞ்சலி செலுத்திவிட்டு ஆங்கிலத்தில் தொடர்ந்து பேசுகிறேன்" என்று முன்னுரை கூறித்தொடர்ந்தார்.

கல்குடா எம். பி. தேவநாயகம் முதல் நாள் தமிழரசுக்கட்சியைத்தாக்கியதற்கும், தமிழ்அரசாங்க ஊழியர்களை மாற்றி, சிங்கள அரசாங்க ஊழியர்களை நியமிக்கவேண்டுமெனயோசனை தெரிவித்ததற்கும், திரு. தேவநாயகத்தின் வீட்டையே உதாரணமாகக் காட்டி பதிலடிகொடுத்தார் நேமிநாதன்.


தமிழ்மொழி விசேட விதிகள் சட்டத்தைத்தக்கபடி அமுல்நடத்துவோம் என்று அரியாசன உரையில் காணப்படுவது குறித்து, "நியாயம் வழங்கவேண்டும் என்ற நல்ல எண்ணமும் விருப்பமும் இருந்தால் சட்டங்களே இல்லாமற்கூட மொழிப்பிரச்னைக்கு தீர்வு கண்டுவிடலாம்; தேவையானது சட்டங்கள் அல்ல; நல்லெண்ணம்தான்" என்று பட்டவர்த்தனமாக தனது கருத்தை வெளியிட்டார்,

மூதூர் இரண்டாவது எம். பி. தங்கத்துரையும் நியமன எம். பி. திரு. எம். சி. சுப்ரமணியமும் தமிழிலேயே தங்கள் கன்னிப் பேச்சை நிகழ்த்தினர்.

திரு. தங்கத்துரையின் பேச்சு அனைவரது கவனத்தையும் ஈர்த்தது; எதிர்காலத்தில் தமிழரசுக்கட்சிக்கு ஆட்சிமன்ற விவாதங்களிலே தர்க்க ரீதியாகப் பேசத்தக்க ஒருவர் இவராகவும் இருக்கலாம் என்ற எண்ணத்தை என்னகத்தே ஏற்படுத்தியது இவரது இன்றைய பேச்சு!

தமிழரசுக்கட்சியின் வகுப்புவாத அரசியலால்தான் தமிழரசுக்கட்சியின் தலைவரும், செயலாளரும், பொருளாளரும் தோற்றனர் என்ற கூற்றுக்கு இவர் பொருத்தமான பதில் கொடுத்தார்.

"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கியதேசியக் கட்சியும் எத்தனையோ முறை முக்கிய அமைச்சர்களையும் பெருந்தலைவர்களை



போதெல்லாம் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகி, தங்கள் வீடுகளைத் தீக்கு அர்ப்பணித்து, உடைமைகளைக் கொள்ளை கொடுக்கவேண்டியநிலை இருந்தது; இன்ன

வாதாடுவதாகச் சொன்ன போதிலும், சிறுபான்மைத் தமிழர்கள் உரிமைப் போராட்டங்களைத் தாங்களாகவே தொடங்கிய பின்னர்தான், வாயளவில் இவர்கள் உதவிசெய்ய முன்வருகிறார்களே தவிர, தாங்களாகவே வலிய முன்னின்று போராட்டம் நடத்த தயாராயில்லை என்பது எம். சி. யின் குற்றச்சாட்டு.

### அக்குறணை ஹமீத்

இவரைத் தொடர்ந்து அக்குறணை முதலாவது எம். பி. ஏ. சி. எஸ். ஹமீத் (யு என். பி.) பேச ஆரம்பித்தார். ஆங்கிலத்திலும், சிங்களத்திலும், தமிழிலும் சரளமாக, தர்க்கரீதியாக



நாடு சுதந்திரம் பெற்றபின் நடைபெற்ற தேர்தல்களிலேயே 1970ம் ஆண்டு நடைபெற்ற தேர்தல்தான் உணர்ச்சிகளின் அடிப்படையில் அல்லாது பொருளாதாரக் கோட்பாடுகளுக்கும் கொள்கைகளுக்கும் இடையிலான தேர்தலாக நடந்தது என்றார். இதற்கு இவர் கூறிய விளக்கம் வருமாறு:

1952ம் ஆண்டு தேர்தல் முதற் பிரதமர் திரு. டி. எஸ். சேனநாயகா திடீரென இறந்ததைத் தொடர்ந்து நடைபெற்றது எனவே உணர்ச்சிகளுக்கே முதலிடம் கிடைத்தது

1956ம் ஆண்டுத் தேர்தலில் மொழிப் பிரச்னை, வகுப்புவாதக் கூச்சல்

# சொல்லம்புகள்

டி.பி.எம். ஹேரத் (வலப்பன-ஸ்ரீலங்கா):- இந்த ஆட்சி மன்றத்தில் 35 எதிர்க்கட்சி எம். பி. க்கள் இருப்பதைப் பார்த்தால் எனக்கு அலிபாபாவின் கதைதான் நினைவுக்கு வருகிறது. அலிபாபாவும் 40 திருடர்களும் என்பதை சற்றே மாற்றி 'அலிபாபாவும் 35 திருடர்களும்' என்று சொல்லலாம்!

0 0 0

எஸ். பி. ஹேரத் (ஹிரியால - யூ. என். பி.):- பணப்பெட்டி காலியாக இருப்பதாக நிதிமந்திரி என். எம். பெரேரா சொல்லியிருக்கிறார். ஆட்சியிலிருந்த அரசியற் கட்சிகள் செட்டியார்களைப் போல பெட்டிநிறைய பணத்தைவைத்து தேர்தல் முடிந்ததும், "இந்தா மகனே! இதை வைத்துக் கொண்டு நாட்டை நடத்திச் செல்!" என்று சொல்ல வேண்டும்? தேவையான பணத்தை நீங்கள் தான் தேடவேண்டும்!

0 0 0

பி. நேமிநாதன் (திருமலை-தமிழரசு);- கல்குடா எம். பி. திரு. தேவநாயகம் தமிழ் உத்தியோகத்தர்களுக்குப் பதிலாக கிழக்கு மாகாணத்தில் சிங்கள உத்தியோகத்தர்களை நியமிக்கவேண்டும் என்று பேசினார். அவர் வீட்டு நிர்வாகத்தை சிங்களவரிடமிருந்து யாழ்ப்பாணத் தமிழருக்கு மாற்றிவிட்டு, இங்கே வந்து அரசாங்கத்துக்கு வேறு விதமாக யோசனை கூறுகிறார். (சிரிப்பு)

0 0 0

எஸ். தங்கத்துரை (மூதூர்-தமிழரசு):- தமிழரசுக் கட்சி நிபந்தனையுடன்தான் எந்த அரசாங்கத்தையும் ஆதரிப்பதாகக் கூறுகிறது; ஆனால் தமிழ்க் காங்கிரஸாராகிய நாங்கள் எந்த நிபந்தனையுமின்று அரசாங்கங்களை ஆதரிக்கிறோம் என்கிறார்கள். தமிழ்க் காங்கிரஸ்காரர்களுக்கு எந்தச் கொள்கையுமில்லை. எனவே அவர்கள் யாரையும் எப்படியும் ஆதரிப்பார்கள். தமிழரசுக் கட்சிக்காரர்களாகிய எங்களுக்குக் கொள்கை இருக்கிறது. அதனை ஏற்றுக் கொள்பவர்களையே ஆதரிப்போம்!

0 0 0

எஸ். தங்கத்துரை (மூதூர் - தமிழரசு):- தமிழரசுக் கட்சி தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தவில்லை என்று சொல்லுகிறார்கள். தமிழ்பேசும் மக்களின் 50 சதவீதமான வாக்குகளைப் பெற்ற கட்சி, தமிழ்ப் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தவில்லை என்றால், 49 சதவிகிதமான வாக்குகளைப்பெற்ற அரசாங்கத்தை எப்படி மக்கள் அரசாங்கமென்று சொல்ல முடியும்?


★ உறுதியானதும்
★ நீடித்து உழைப்பதும்
★ தன்னிகரற்றதுமான

"வைத்திலிங்கம்ஸ்"

இரும்பு — பித்தளை - மரஸ்குறு ஆணிகளை நீங்கள் வாங்குவதனால் ஒரு சிறந்த பொருளைவாங்குவதோடு உள்நாட்டு உற்பத்தியையும் வளர்க்கின்றீர்கள் என்பதை மறவாதீர்கள்.

தயாரிப்பாளர்:

என். வைத்திலிங்கம் நிறுவனத்தார்

இரும்பு வியாபாரிகள்

450, பழையசோனக தெரு, - கொழும்பு-12

தொலைபேசி: 33143—4.

இல 38, கே. கே. எஸ். வீதி — யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 530.

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

நாகேஷ்—வி கே. ராமசாமி நடித்த

பெண்ணை வாழவிடுங்கள்

இன்று முதல் தினசரி 4 காட்சிகள்

வின்சர் (யாழ்ப்பாணம்)

ரவிச்சந்திரன் — சரோஜாதேவி

நாகேஷ், பாலையா நடித்த

ஓடும்நதி

டைரக்ஷன்: தாதாமிராசி

பின்னணி: சுசிலா - சௌந்தரராஜன்.

2வது வாரம்!

வெஸ்லிசினிமா

மானிப்பாய்

தினசரி: 6-30, 10-00

பிரபோயா, போயா 2-30மணி

சிவாஜி-பத்மினி நடித்த

திருவருட்செல்வர்

[ஈஸ்ட்மன் கலர்]

ஸ்ரீ காலிங்கன்

இணுவில்

தினசரி 6-30-10-00 மணி

போயா, பிரிபோயா 2-30

ஜெய்சங்கர் - எல் விஜயலட்சுமி நடித்த

தாய்மேல் ஆணை

ராஜா (யாழ்ப்பாணம்)

தினசரி 3 காட்சிகள்

பிரி-போயா, போயா 4 காட்சிகள்

சேக்முக்தர் -கும்கும் நடித்த

லம்பு இன் கொங்கொங்

(Lamboo in HongKong)

(துப்பறியும் ஹிந்திப்படம்)

REGAL JAFFNA

Daily 3 Shows

Poya, Prepoya 4 Shows

John Wayne, Kirk Douglas in

THE WAR WAGON

MANOHARA JAFFNA

Daily 4-45, 7&9-45 p.m.

Poya-Pre. Poya 10.30 a.m.

THE GOOD GUYS AND THE BAD GUYS

(color)

இப்பொழுது திரையிடப்படுகிறது

வெலிங்டன் யாழ்ப்பாணம்

தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி

(போயா, பிரிப்போயா காலை 10-30)

எம்.ஜி.ஆர். ஜெயலலிதா

நாகேஷ் ரெங்கராவ்

மற்றும் பலர் நடிந்த







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட அயர்லாந்து குழப்பங்களில் மூன்று பேர் கொல்லப்பட்டனர்

## நூற்றுக்கணக்கானவர்களுக்கு காயம்

பெல்பாஸ்ட், ஜூன் 28

வட அயர்லாந்தில் நேற்று இரண்டாவது நாளாகநடைபெற்ற கலவரங்களின் காரணமாக மூவர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். நூற்றுக்கு மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

கத்தோலிக்கர்களுக்கும் புரட்டஸ்தாந்துகிறிஸ்தவர்களுக்குமிடையில் வட அயர்லாந்தில் மோதல்கள் நடைபெற்றுவருகின்றன.

பிரிட்டிஷ் எம். பி யான செல்வி பேர்ணடெட் டாட்லிக்ஸ் கைதுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து அங்கு குழப்பங்கள் படுமோசமாக மாறியுள்ளன.

நேற்று வட அயர்லாந்து தலைநகரான பெல்பாஸ்ட்டில் கத்தோலிக்கர்களும் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்களும் படு மோசமான மோதல் ஒன்றில் கலந்து கொண்டார்கள். இதில் மூவர் கொல்லப்பட்டதுடன் நூற்றுக்கணக்கானவர்கள் காயமடைந்தார்கள். ஆறு பாதுகாப்புப் படையினரும் துப்பாக்கிக் காயங்களுக்குள்ளாகியுள்ளனர். கார்களையும், பஸ்களையும் புரட்டித்தள்ளி ஆர்ப்பாட்டக்காரர்கள் தீயிட்டார்கள். பல வீடுகளுக்கும் தீயிடப்பட்டன. குழப்பங்களை அடக்க ராணுவத்தினர் குண்டாந்தடிகளையும் வாயு குண்டுகளையும் பயன்படுத்தினார்கள்.

வடஅயர்லாந்தின் இன்னெரு பெரிய நகரமான லண்டன் டெரியிலும்நேற்று மோதல்கள் இடம்பெற்றன. இதிலும் நூற்றுக்கணக்கானவர்கள் காயமடைந்திருக்கிறார்கள்.

## "வடக்கு கிழக்கில் பல்கலைக்கழகத்தை விரைவில் நிறுவுக"

மாவிட்டபுரம், ஞாயிறு

வடக்கு கிழக்கு மாகாணங்களில் பல்கலைக்கழகம் நிறுவப்படும் என சிம்மாசனப் பிரசங்கத்தில் ஆட்சியாளர் குறிப்பிட்டதை நான் வரவேற்கின்றேன். ஆனல் இதைக் கூடிய விரைவில் நடைமுறைக்கு கொண்டு வருதல் உங்களது பொறுப்பாகும். நாட்டின் தற்போதைய நிதி நிலைமையை பார்க்கும்போது இத்திட்டத்தை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவாருங்கள் என நான் கேட்டுதவரும், எனினும் உங்களுக்கு முதலாவது சந்தர்ப்பம் கிடைக்கும்போது இப்புனித காரியத்தை செய்து முடிப்பீர்களென நம்புகின்றேன். முஸ்லிம் சகோதரர்களுக்கு ஒரு பல்கலைக்கழகம் சிங்கள சகோதரர்களுக்கு ஒன்று அல்லது கூடிய பல்கலைக்கழகங்களும் அமைக்க நீங்கள் அமைத்துள்ள திட்டம் வரவேற்கத்தக்கது.

இவ்வாறு காங்கேசன்துறை பட்டினசபைத் தலைவர் க. ஜெயபாலசிங்கம் வீடமைப்பு அமைச்சர் பீட்டர் கெனமனிடம் சமர்ப்பித்த மகஜரொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம் மகஜரில் மேலும் தெரிவிக்கப் பட்டதாவது- காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி பல ஆண்டு காலங்களுக்கு முன்னதா

மைகளையும் அனுபவிக்க இருக்க வேண்டும். ஆகையால் எமது நாட்டைக் காப்பாற்றுவதற்கு நிதியமைச்சர் நிதியை மாத்திரம் சாராது இப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்றி இதிலும் பார்க்க அதிகப்படியான நன்மைகளை பெற்று நாட்டை இலகுவாகக் காப்பாற்றலாம். காங்கேசன் துறை துறைமுக அபிவிருத்தி வேலைகளைத் தொடர்ந்து அமுல் நடத்தி வெகு விரைவில் துறைமுக திறப்பு விழாவை நடத்துவதுடன் போதிய பண்டகசாலைகளையும் கட்டி பல கப்பல்களை வரவழைக்க திசை திருப்புமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

மயிலிட்டி மீன் பிடித் துறைமுக அபிவிருத்தி வேலைகளை தொடர்ந்து நடத்த ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மகாவலிகங்கை வடககே திசை திருப்பப்பட்டு மேலும் போதிய தண்ணீர் வசதி பெற்றுல் கமத்தொழில் மேலும் அபிவிருத்தியடைவதுடன் நமது நாடும் முகவும் முலாதாரப் பொருட்களில் தன்நிறைவைக் காணலாம். மகாவலி கங்கைத் திட்டம் சம்பந்தமாக நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு வடக்குக்குநீரை திருப்புமாறு சிபார்சு செய்தால் இத்திட்டத்தை கூடிய

## இனசமரச கமிட்டிகள்

லண்டன், ஜூன், 28

பிரிட்டனிலுள்ள பல்வேறு இனங்கள் மத்தியில் நல்லெண்ண உறவைவளர்க்கும் நோக்கத்துடன் நகரங்கள் பட்டினங்கள் தோறும் இன உறவுசமரச கமிட்டிகள் நிறுவப்பட்டுவருகின்றன. ஜோக்ஸயர் நகரில் நிறுவப்பட்டுள்ள இனசமரச கமிட்டியின் நிர்வாக அங்கத்தவராக ஒரு இலங்கை முஸ்லிம் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஜனப் பஸ்லன் காலீத் எனப்படும் இவர் இக்கமிட்டியின் காரியதரிசியாகவும் இன உறவு அதிகாரியாகவும் நியமனம் பெற்றிருக்கிறார்.

முன்னுள் பிரிட்டஷ் கல்விமந்திரியான சேர். எட்வேர்ட் போயிலும் இக்கமிட்டியின் நிர்வாக அங்கத்தவர் ஒருவராக நியமிக்கப் பட்டிருக்கிறார். 1962-ம் ஆண்டிலிருந்து 1964-ம் ஆண்டு வரை கான்சர் வேடிவ் அரசாங்கத்தின் கீழ்இவர் கல்விஅமைச்சராக கடமையாற்றிஞர்.

## கண்டுபிடிப்பு

சுன்ஞகம், ஞாயிறு

அமெரிக்கதொல்பொருள் ஆராய்ச்சிக்குழுவைச் சேர்ந்தவர்கள் பழையகால இலக்குமி உருவம் ஒன்றை கந்

# ஜவுளி சிகரட்டுகள்

## பிரிட்டனின் புதிய கண்டு பிடிப்பு

லண்டன் ஜூன் 28

இங்கிலாந்திலுள்ள இரசாயனக்கம்பனிஒன்று விஞேதமான சிகரட்டுகளை கண்டு பிடித்திருக்கிறது. புகையிலையைக் கொண்டு தயாரிக்காமல் ஜவுளிகளுக்குப் பயன் படுத்தப்படும் ஒருவகை மரத்தூள் நூலிழைகளைக் கொண்டு உருவாககப்பட்ட புதுமையான சிகரட்டுக்கள் இவை. இந்த நவீனரகமான 'ஜவுளி சிகரட்டுகளை' பாவிப்பவர்களுக்கு தீங்கு எதுவும் ஏற்படாதென தயாரிப்பாளர்கள் கூறுகிறுர்கள்.

மரம் செடிகளிலிருந்து பெறப்படும் தூள்இழையங்களில் ஒருவகை இரசாயனப் பொருள் கலக்கப்படுகிறது. இதனுல் அவை ஒருவ நூல்இழைகளாகமாற்றப்படுகிறன. இந்த நூலிழைகள் செயற்கைப் புகையிலைத் தூள்சள் போன்றது. இவற்றில் நிக்கொட்டின், வாசனைத் திரவங்களைக் கலந்து விட்டால் அசல் சிகரட் போன்ற சுவையையும், மணத்தையும் கொடுக்கும்

இயற்கைப் புகையிலையை இறக்குமதி செய்வதிலுள்ள சங்கடம், அத்துடன் புகையிலைமீதுள்ள பெரும் வரிச்சுமை ஆதிய பிரச்னைகளைத் தவிர்த்துக் கொள்ளும் நோக்கமாகவே இந்த புதிய சிகரட் ஆராய்ச்சி மேற்கொள்ளப்படடது. இந் சிகரட்டுகளின் விலை மிகக் குறைவானது.

## 'முதலாவது அதிபர் பதவி பெற்ற தமிழாசிரியர்'

### சேவைநலம் பாராட்டுவிழாவில்பேச்சு

யாழ்ப்பாணம், திங்கள்

ஆசிரியமணியவர்கள் ஆசிரியப்பணியைத் தெய்வ பணியாகத் தொண்டாற்றிஞர், எப்போதாவது கடுகடுத்த முகத்தோடு நடந்து கொள்ளவில்லை மாணவர்க்கு முன்மாதிரியாய் அழகாகத் தன்னை ஆக்கிக்கொள்வார். ஆசிரியர் தொழிற்சங்கப் பணியில் ஆசிரியர்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெறுவது மகா கஷ்டம். ஆசிரியமணியவர்கள் பாராட்டுப் பத்திரத்தில் கூறியாங்கு திறம்பட நடந்துள்ளார். உத்தியோகங்கட்குப் போட்டியிட்டபோதும் ஜனநாயகப் பண்புடன் நடந்து கொண்டுள்ளார். தமிழாசிரியர்கட்கு அதிபர் பதவிகள் கொடு என்றுகோரிக்கை விடுத்தோம். முதன்முதல் த[illegible]சிரியர்களில் அதிபர் பத[illegible]பெற்றவருமிவரே.

அகில இலங்கை தமிழாசிரியர் சங்க முன்னுள் தலைவரும் பழுகாம[illegible] வித்தியாலய அதிபராயிருந்து ஓய்[illegible]பெற்றவருமாகிய ஆசி

கத்தை எதிர்நோக்கும் பல பிரச்னைகளை எவருக்கும் மனக்கசப்பின்றி சுமூகமாகத் தீர்ப்பதற்கு வழிகாட்டும் என்ருர்.

மற்றும் பலரும் பாராட்டிப் பேசினர், ஆசிரியமணி இராசேந்திரம் நன்றிசொன்ஞர். (கு.வி.ம)

## சாம்ராஜ்ய அபிவிருத்திக்கு மேலதிக முதலீடு

லண்டன், ஜூன் 28

சாம்ராஜ்ய நாடுகளின் தொழில்துறை அபிவிருத்திக்காக நிதியுதவி அளிக்கும் ஸ்தாபனமான, சாம்ராஜ்ய அபிவிருத்தி நிதி கம்பனி சென்றவருடம் 1,800,000 பவுண்கள்வரை [illegible]திகமாக முதலீடு செய்[illegible]ருக்கிறது.

1953-ம் ஆண்டு இந்தக் கம்பனி ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து இதுவரை மொத்தம் 41,000,000 பவுண்களை சாம்ராஜ்ய கைத்[illegible]றில்



'சதங்கை நர்தனலய' இயக்குனர் செல்வி லீலா நாராயணனின் மாணவிகளான செல்வி ரமணி, செல்வி நளினி ஆகியோரது நடன அரங்கேற்றம் சமீபத்தில் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. யாழ்ப்பாணம் 'அரஸ்கோ' அரசரத்தினம் தம்பதிகளின் புதல்விகள் இவர்கள்.

## வீடமைப்பு அமைச்சின் திட்டங்கள்

கோட்டை, ஞாயிறு

அரசாங்க வீடமைப்புத் திட்டங்களில் மூன்றுதரப்பட்ட வீடுகளையே கட்ட வீடமைப்பு நிர்மாண அமைச்சு உத்தேசித்துள்ளது,

0 தனியார் துறையிலும் அரசாங்க துறையிலும் ஆடம்பர வீடுகள் கட்டப்படுவது கட்டுப்படுத்தப்படும்.

0 தற்பொழுதுள்ள அரசாங்க கட்டடங்கள் கூடுதலான குடும்பங்களை அமர்த்துவதற்கு திருத்திஅமைக்கப்படும்,

0 அரசாங்கம் வருங்காலத்தில் மாடி வீடுகளைக் கட்டுவதில் கவனம் செலுத்துமென்றும், பெரிய குடும்பங்களுக்கே இவ் வீடுகள் ஒதுக்கப்படும் என்று வீடமைப்பு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## புதிய நிர்வாகிகள்

உடுப்பிட்டி, ஞாயிறு

கட்டுபெத்தையிலுள்ள இலங்கை உயர்தொழில் நுட்பவியல் கலாசாலைத் தமிழ் மன்றத்தில் புதுவருட நிர்வாகிகள் தேர்வு அண்

## பருத்தித்துறை இ.போ.ச. டிப்போ தொழிலாளர் குழு

உடுப்பிட்டி, ஞாயிறு

இலங்கைப் போக்குவரத்துச் சபைப் பருத்தித்துறை டிப்போவிலும் பஸ் தொழிலாளர்களைக் கொண்ட தொழிலாளர் கமிட்டி உருவாககப்பட்டு உள்ளது. ஒன்பதுபேர் அங்கம் வகிக்கும் இக் கமிட்டியின் தலைவராகத் திரு கே. நல்லதம்பி தெரிவு செய்யப்பட்டு உள்ளார்.

இ. போ. ச. வீதிப்பரிசோதகர் திரு செல்லையா, டிப்போ பரிசோதகர் திரு. துரைராசா, பொறியியல் ஊழியர் திரு. கே. இராமகிருஷ்ணன் ஆகியோரும் இத்தொழிலாளர் கமிட்டியில் பிரதிநிதித்துவம் வகிப்பர்.

இ.போ.ச.தலைவர் திரு அனில்முனசிங்கா வுக்குப் பருத்தித்துறை டிப்போ சீரமைப்புப் பற்றிச் சில ஆலோசனைகளையும் தொழிலாளர் கமிட்டி தெரிவித்துள்ளது. சீரான பஸ் சேவைக்காக உடனடியாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும், பழுதடையும் பஸ் வண்டிகளின் எண்ணிக்கையைக் குறைக்க மேற்கொள்ள வேண்டிய முயற்சி பற்றியும் விளக்கியுள்ள கமிட்டியினர் டிப்போ தலைவரைக் கோரி உள்ளது.

சகல இபோச ஊழியர்களும் பொதுமக்களுக்கு ஒழுங்கான பஸ் சேவையை அளிக்க ஒத்துழைக்கவேண்டுமென்றும், பஸ் பிரயாணிகளுடன் அன்புடன் பழகவேண்டுமென்றும் இக் கமிட்டி வேண்டுகோள் விடுத்துள்ளது.

## 'கிளப்'பில் திருட்டு

### சந்தேகத்தில் ஒருவர் கைது

மட்டுவில், ஞாயிறு

சாவகச்சேரியிலுள்ள பொழுது போக்குக் கிளப் ஒன்றை உடைத்துத் திருடியதாகக்கூறப்படும் வாலிபரைத் தேடிப்பிடித்த சாவகச்சேரிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு என், கதிர்காமநாதன், அவரிடமிருந்து சில பொருட்களை கைப்பற்றியதுடன், அவரை சாவகச்சேரி மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர்செய்தார்.

இக்கிளப்பை உடைத்துத் திருடியதாக சாவகச்சேரிப் பொலிஸில் முறைப்பாடு செய்துகொண்டதைத் தொடர்ந்து சாவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...பத்த மகஜரொன்றில் தெரிவிக்கப்பட்டுளளது.

அம் மகஜரில் மேலும் தெரிவிக்கப் பட்டதாவது:- காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி பல ஆண்டு காலங்களுக்கு முன்னதாகவே நிறைவேறி இன்று அரசாங்கம் அதனுல் வரும் வருமானத்தையும் மற்றும் நன்

பொருட்களில் தன்நிறைவைக் காணலாம். மகாவலி கங்கைத் திட்டம் சம்பந்தமாக நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு வடக்குக்குதிசை திருப்புமாறு சிபார்சு செய்தால், இத்திட்டத்தை கூடிய கெதியில். நாட்டுநன்மைக்காக ஆரப்பிப்பீர்களென நம்புகின்றேன்.

## கண்டுபிடிப்பு

சுன்னுகம், ஞாயிறு

அமெரிக்கதொல்பொருள் ஆராய்ச்சிக்குழுவைச் சேர்ந்தவர்கள் பழையகால இலக்குமி உருவம் ஒன்றை கந்தரோடையிலுள்ளதனியார் ஒருவருடைய காணிக்குள் கண்டுபிடித்துளளனர்.

# அமைச்சர்களுக்கு வரவேற்பு

மாவிட்டபுரம், ஞாயிறு

''இப்பகுதி மக்களினதும், அகில இலங்கை வாழ் மக்களினதும் நன்மை கருதி நாம் மேற்கொள்ளவிருக்கும் காங்கேசன்துறை துறைமுகவேலைகளை கூடிய விரைவிலே நிறைவேற்ற சிமெந்து முக்கியமாக தேவைப்படும். ஆகவே சிமெந்தை உற்பத்தி செய்யும் தொழிலாளர்களாகிய நீங்கள் அதிகமான அளவு சிமெந்தை உற்பத்தி செய்து வேலைகளை கூடிய விரைவில் நிறைவேற்ற உதவுங்கள்.''

இவ்வாறு காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை தொழிலாளர்கள் மத்தியில் உரையாற்றிய வீடமைப்பு, நிர்மாணதுறை அமைச்சர் திரு. பீட்டர் கெனமன் கூறினுர்.

காங்கேசன்துறை சிமெந்து பொது தொழிலாளர் யூனியனுல் அளிக்கப்பட்ட வரவேற்பு வைபவத்துக்கு யூனியன் தலைவர் திரு. எஸ். கணபதிப்பிள்ளை தலைமை வகித்தார்.

அமைச்சர் மேலும் பேசுகையில் கூறியதாவது: தொழிலாளி வர்க்கத்திலேயே இந்நாட்டின் அபிவிருத்தி தங்கியுள்ளது. இதை உணர்ந்தே எமது அரசு முதலாளித்துவத்தை எதிர்த்து தொழிலாளி வர்க்கத்தை ஆதரிக்கிறது. தொழிலாளி வர்க்கம் இந்நாட்டிலுள்ள முற்போக்கு சக்திகளுடன் இணைந்து செயல்படுவதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன்.

தொழிலாளர்கள் நாட்டை முன்னேற்ற இன, மத, மொழி பேதமற்ற முறையில் கடமை புரிய வேண்டும். அப்போதுதான் சகல இன, மதங்களிடையேயும் நல்லுறவு ஏற்பட்டு தொழிலாளிகள் நன்மையடைவதுடன் நாடும் முன்னேறும்

### காங்கேசன்துறை துறைமுகத்தில்....

மாவிட்டபுரம், ஞாயிறு

''இலங்கையின் ஏனைய துறைமுகங்களில் தொழிலாளருக்குள்ள சலுகை இங்கும் அளிக்கப்படும்.

இவ்வாறு தபால்மந்திரி திரு, செல்லையா குமாரசூரியர் யாழ். மாவட்ட கூட்டுறவு துறைமுக சேவைச் சமாசத்தின் சார்பில் காங்கேசன்துறை துறைமுகத்தில் அளிக்கப்பட்ட வரவேற்பில் பேசுகையில் கூறினுர்.

இக்கூட்டத்தில் தபால் அமைச்சர் திரு. குமாரசூரியர், வீடமைப்பு நிர்மாண வேலைப்பகுதி அமைச்சர் திரு. பீட்டர்கெனமன், மற்றும் நியமன அங்கத்தவரான திரு. அஸீஸ், திரு. எம். சி. சுப்பிரமணியம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

யாழ். மாவட்ட கூட்டுறவு துறைமுகச் சேவைச் சமாசத்தின் சார்பில் சமாசத்தின் உபதலைவர் திரு. கிருஷ்ணர் நாட்டைக் காக்கும் நிதிக்காக ரூபா 2500 பெறுமதியான காசோலையை தபால் தந்தி அமைச்சரிடம் கையளித்தார்.

### பண்டத்தரிப்பில்...

அராலி, ஞாயிறு

தபால் அமைச்சர் பண்டத்தரிப்பு தபால்நிலையத்தில் புதிய தொலைபேசி பரிவர்த்தன கருவியை இயக்கி வைத்தார். இவ் வைபவத்தில் தபால் தந்திப் பகுதி மாஅதிகாரி திரு. வேர்ணன் அபயசேகராவும் கலந்துகொண்டார். திரு. அபயசேகரா உரையாற்றினுர்,

வட்டுக்கோட்டை எம்.பி. திரு ஆ. தியாகராசா பேசுகையில், ''எமக்கும் சிங்கள மக்களுக்குமிடையே நெருங்கிய உறவை ஏற்படுத்துவதற்கு எமது தபால் தந்தி அமைச்சர் திரு. செ. குமாரசூரியர் சாலச் சிறந்தவர். இவர் பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் பூரண நம்பிக்கையைப் பெற்றவர். பிரதம மந்திரியாரோடு தமக்கிருக்கும் செல்வாக்கைப் பயன்படுத்தி தமிழ் மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையே ஏற்பட்டிருந்த பிணக்குகளை தீர்த்து வைத்து நல்லுறவை உண்டு பண்ணுவாரென்பதில் எனக்கு சந்தேகமில்லை'' என்றுர்.

அமைச்சர் திரு. குமாரசூரியர் கூறியதாவது:

''நாம் அரசாங்கத்திற்கும் மக்களுக்குமிடையே நெருங்கிய தொடர்பை உண்டுபண்ண சில புதிய திட்டங்களை தயாரித்திருக்கிறேம். இத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வரும்போது மக்களுக்கும் அரசாங்கத்திற்குமிடையே நல்லுறவு ஏற்படுமென நாம் பூரணமாக நம்புகிறேம். நீங்கள் உங்கள் கிராமத்தில் பேசும், எழுதும் மொழியில் எவ்வித மாற்றமும் எப்பொழுதாவது ஏற்படுமென்பதை நான் நம்பவில்லை: உங்களோடு நாம் தொடர்புகொள்ளும்போது நீங்கள் பேசும் மொழியில் தான் செயலாற்றுவோம்'' என்றுர்.

### வட்டுக்கோட்டையில்...

அராலி, ஞாயிறு

தபால் அமைச்சர் திரு செல்லையா குமாரசூரியர் வட்டுக்கோட்டைக் கிராம மக்களால் வரவேற்கப்பட்டு உபசரிக்கப்பட்டார். இவர் வட்டுக்கோட்டைச் சந்திக்கு வந்ததும் வட்டுக்கோட்டை எம் பி திரு ஆ தியாகராசா, திரு யோகீஸ்வரன், கி ச தலைவர் திரு நிற்சிங்கம் மற்றும் பலரும் மாலையிட்டு வரவேற்றனர் அமைச்சரும் அவரது சகாக்களும் மேள வாத்தியத்துடன் வட்டு மேற்கு திருஞானசம்பந்த வித்தியாசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்

---

...பதவிபெற்றவருமிவரே.

அகில இலங்கை தமிழாசிரியர் சங்க முன்னுள் தலைவரும் பழுகாமம் மகாவித்தியாலய அதிபராயிருந்து ஓய்வுபெற்றவருமாகிய ஆசிரியமணி திரு கே. எல். இராஜேந்திரத்துக்கு அளிக்கப்பட்ட சேவைநலம் பாராட்டுவிழாவில் தலைமை வகித்த அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்க தலைவர் திரு இ. கந்தையா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ் மலாயன்கபே மேல் மாடியில் நடந்த இவ்விழாவில் பண்டிதர் ச. பொன்னுத்துரை பேசுகையில்;

'பழைய முகாமையாளர் காலத்திலே தமிழாசிரியர் சேவையும் தமிழாசிரியர் நலனைப் பாதுகாக்கும் தொழிற்சங்க சேவையும் மிகவும் உன்னதமாயிருந்தது. அக் காலத்தில் ஆசிரியமணி இராஜேந்திரம் அவர்கள் செய்த சேவை போற்றத்தக்கது. ஆசிரியர் சங்கங்களிடையேஉண்டான பூசல்களைக் கண்டபோது சமாதான தூதுவராய் பெரும்பங்கு கொண்டுழைத்தார்' என்றுகூறினுர்.

யாழ் இந்துக்கல்லூரி அதிபர் திரு என். சபாரத்தினம் பேசுகையில், நல்லவர் தீயவரென்பது அவரவர் எச்சத்தாலறியப்படும். இராசேந்திரம் பிள்ளைகளதிறம் படப் படித்துபட்டம்பெற்றுயர்ந்த உத்தியோகங்கள் வகிக்கிறுர்கள். இதிலிருந்து ஆசிரிமணியின் சேவை திறம்பட நடந்துளளதனையறியலாம். ஓர் சிறந்த ஆசிரியனுயிருந்தால் அவன் சமூகத்தை எந்த அளவில் திருத்த முயல்கிருன் என்ற அளவிலேயே அவன் சேவைதிறம்படும். சமூகத்திலே ஒருதலைவன் தான் இராசேந்திரம் அவர்கள்' என்றுர்.

ஆசிரியமணி திரு நா. தம்பிரத்தினம் பேசுகையில் தலைவர்களைப் பாராட்டுவதினுல் பயன்பெறுபவர்கள நாமே. திரு இராசேந்திரம் அவர்களோடு சகஊழியனுக கடமைபுரிந்தேன். ஆகவே எனக்குப் பாராட்டிப்பேச போதிய வசதியுண்டு. ஆசிரிய உலகில் நயம்பட்ட வாழ்க்கைக்கு எடுத்துக்காட்டாக அமைந்தவர் திரு.கே, எல். இராசேந்திரம் அவர்கள. திரு இராசேந்திரம் அவர்களது நற்குணங்கள ஆசிரிய உலகிற்குப் பதியவேண்டும்.

ஓய்வுபெற்ற நமது ஆசிரியமணி இராஜேந்திரத்தைப்பின்பற்றி தற்போது சேவையில் ஈடுபடும் ஆசிரியர்களும் கடமை. கண்ணியம் கட்டுப்பாடு என்னும் லட்சியத்தோடு சமூகப்பணி ஆற்றினுல் ஆசிரிய உல...

---

...மாக முதலீடு செய்திருக்கிறது.

1953-ம் ஆண்டு இந்தக் கம்பனி ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து இதுரை மொத்தம் 41,000,000 பவுண்களை சாம்ராஜ்ய கைத்தொழில்களில் முதலீடு செய்திருக்கிறது. மேற்படிவிபரங்கள் இக்கம்பனியின் வருடாந்த அறிக்கையில் தரப்பட்டிருக்கின்றன.

வெளிநாடுகளில் குறிப்பாக கரேபின் நாடுகளிலும் தென் கிழக்காசிய நாடுகளிலும் சொந்த பிரதிநிதிகளை வைத்திருக்க இக்கம்பனி தீர்மானித்திருக்கிறது. இந்நாடுகளில் மேலதிக முதலீடு செய்து வர்த்தகத்தை விஸ்தரிப்பதே இக் கம்பனியின் நோக்கமாகும் இந்தியாவில் மட்டும் இக் கம்பனி 9,300,000 பவுண்கள்வரைமுதலீடுசெய்துள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

## ஜோர்டானில் புதிய மந்திரிசபை

அம்மான், ஜூன் 28

ஜோர்டானில் 17 பேர் கொண்ட புதிய மந்திரிசபையொன்று பதவி யேற்றிருக்கின்றது.

இந்தமந்திரிசபை மன்னர் ஹுசேனுக்கு அதிக விசுவாசமுள்ளதாகவும் பாலஸ்தீன விடுதலை இயக்கங்களுக்கு அனுதாபம் உள்ளதாகவும் இருக்கும் என்று கருதப்படுகின்றது. திரு. அப்துல் ஹிபாய் புதிய பிரதமராகப் பதவி ஏற்றுர்.

## கி, ச. பாராட்டு

உடுப்பிட்டி, ஞாயிறு

பொதுத்தேர்தலில் கூட்டணிக் கட்சிகள் ஈட்டிய வெற்றி சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது. முதலாளித்துவக் கட்சியை முறியடித்துப் பொதுமக்களின் ஏகோபித்த நன்மதிப்பைப் பெற்று ஆட்சிபீடம் ஏறிய கட்சி கூட்டணி அரசாங்கம் ஒன்றுதான்.

இவ்வாறு உடுப்பிட்டிக் கிராமசபை, பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கும், அமைச்சர்களுக்கும், அரசாங்க உறுப்பினர்களுககும் பாராட்டுத் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

உடுப்பிட்டிக் கிராமசபை தலைவர் திரு. ஆர். ஆர் தர்மரத்தினம் தலைமையில் நடைபெற்ற கி. ச. கூட்டத்தில் முன்னுள் கிராமசபை உபதலைவரும், 2-ம்வட்டார உறுப்பினருமான திரு பி கே குலசிங்கம் கொண்டுவந்த இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

உடுப்பிட்டி, ஞாயிறு

கட்டுபெத்தையிலுள்ள இலங்கை உயர்தொழில் நுட்பவியல் கலாசாலைத் தமிழ் மன்றத்தில் புதுவருட நிர்வாகிகள் தேர்வு அண்மையில் நடைபெற்றது. புதிய நிர்வாகிகள் விபரம் வருமாறு:

தலைவர்: திரு இ. முத்துரத்தினனந்தன், துணைத் தலைவர் திரு வே. அனந்தநாதன், பொதுச் செயலாளர்: திரு சு. பொன்னுத்துரை, துணைச் செயலாளர் திரு மா, மால்மருகமூர்த்தி பொருளாளர் திரு சி. மகேந்திரநாதன், இதழாசிரியர் குழுத் தலைவர் திரு சீ. பொகாந்தகுமார்.

0 0 0

யாழ்ப்பாணம் திங்கள்

மாதகலில் அண்ணு மன்றத்தின் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர்: ச சந்திரதாசன், காரியதரிசி: பல்தசார், தனதிகாரி: ச. ஆனந்தராசா ஐந்து பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

0 0 0

மாவிட்டபுரம், ஞாயிறு

அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழாசிரியர் சங்க வலி-வடக்குக் கிளையின் வருடாந்தக் கூட்டம் மாவிட்டபுரத்தில் நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. க நவரத்தினம், உபதலைவர்கள்: திரு. க. கந்தையா, திரு. க நாகநாதன், காரியதரிசி: திரு. க. சுப்பிரமணியம், உபகாரியதரிசிகள்; திரு. மா பாலசுந்தரம், திரு க நடராசா, பொருளாளர்: திரு. மு க சுப்பிரமணியம், உபபொருளாளர்: திரு. வே தனபாலசிங்கம்.

பின்வருவோர் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

திருமதி செ கனகசுந்தரம், திரு. வே கந்தையா, திரு. சு. மாணிக்கம்.

0 0 0

சாவகச்சேரி, ஞாயிறு

ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் கிளை சாவகச்சேரியில் ஸ்தாபிக்கப்பட்டுளளது. கீழ்க்கண்ட உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு வ துரைசிங்கம், செயலாளர்: திரு ச ஸ்கந்தராசா, பொருளாளர்: திரு வி தர்மலிங்கம் 25 பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டுளளது.

---

...டிய நடவடிக்கைகள் பற்றியும், பழுதடையும் பஸ் வண்டிகளின் எண்ணிக்கையைக் குறைக்க மேற்கொள்ள வேண்டிய முயற்சி பற்றியும் விளக்கியுள்ள கமிட்டியினர் டிப்போ பொறியியல் சாலையில் முடங்கிக் கிடக்கும் பஸ்களை சேவைக்கு விடச்சில உப உறுப்புக்களை அனுப்பி வைக்குமாறு இ. போ. ச.

## ஓவசியர் சங்கம் நிதிவழங்க முடிவு

பருத்தித்துறை, ஞாயிறு

'கூட்டுமுன்னணி அரசாங்கம் எதிர் பாராத வகையில் பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றியது பற்றி நாம் மகிழ்ச்சியும் வாழ்த்தும் தெரிவிக்கும் அதே வேளையில் எமது சேவையை நாம் எவ்வித பாரபட்சமுமின்றிக் கடமை யுணர்ச்சியுடன் தொடர்ந்து ஆற்றுவோமென்றும் உறுதியளிக்கிறேம்'.

வடபகுதி ஐக்கிய உள்ளூராட்சி ஓவசியர்சங்கம் அண்மையில் தலைவர் திரு எஸ். ஜோன்பிள்ளை தலைமையில் நடந்த கூட்டத்தில் இத்தீர்மானத்தை நிறைவேற்றி பிரதமருக்கும், உள்ளூராட்சி அமைச்சர் திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவுக்கும் அனுப்பியுள்ளது. இக் கூட்டத்தில் உள்ளூராட்சி அமைச்சரைப் பேட்டி கண்டு சம்பள விடயம், சிங்களத்தகுதி காண் பரீட்சை போக்குவரத்து அலவன்ஸ் ஆகியவற்றைப்பற்றிப் பேசுவதாகவும் தீர்மானிக்கப்பட்டது நாட்டைக் காக்கும் நிதிக்கும் ஒரு குறிப்பிடக் கூடியளவு தொகைப்பணம் வழங்குவதாகவும் முடிவு செய்யப்பட்டது.

## கால்நடைகளுக்கு கரைச்சிப் பகுதி உகந்தது

யாழ்ப்பாணம் திங்கள்

கால்நடைகளுக்காக ஒதுக்கப்படும் மேய்ச்சல் தரைகளை விவசாயிகள் பயன்படுத்துவதில்லையென கரைச்சி காரியாதிகாரி தெரிவிக்கின்றுர்.

விவசாயிகளின் நலன் கருதி அரசாங்கம் மேச்சல் தரைகளை பரந்தன் வடக்குக்காடு, இராமநாதபுரம், உருத்திரபுரம், நீவில் ஆகிய இடங்களில் வழங்கியுள்ளதென்றும் அவற்றைப் பயன்படுத்துவோர் இல்லையென்றும் குறிப்பிடும் காரியாதிகாரியின் அறிக்கையில் கால்நடைகளை அதிகமாக வளர்பதற்கு கரைச்சிப்பகுதி உகந்ததென்றும் கூறப்பட்டுள்ளது. (குவிம)

---

...சேரி மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் செய்தார்.

இக்கிளப்பை உடைத்துத் திருடியதாக சாவகச்சேரிப் பொலிஸில் முறைப்பாடு செய்துகொண்டதைத் தொடர்ந்து சாவகச்சேரிப் பொலிஸ் நிலைய அதிபர் திரு கதிர்காமநாதன் தலைமையில்சென்ற பொலிஸ்கோஷ்டி புகையிரத நிலைய வீதியைச் சேர்ந்த 18 வயது வாலிபரொருவரைச் சந்தேகத்தின்மீது கைது செய்தது.

சந்தேக நபரிடம் குறிப்பிட்ட கிளப்பிலிருந்துதிருடப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 2 போத்தல் சாராயம் காப்போத்தில் ஜின் ஒரு பக்கற் சிகரட் காசு ரூபா 25 ரொக்கம் ஆகியன இருந்ததாம்.

சாவகச்சேரிப் பொலிசார் குறிப்பிட்ட பொருட்களையும், சந்தேக நபரையும் சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. விச்னராஜா முன்னிலையில் ஆஜர்செய்தனர். மாஜிஸ்திரேட் சந்தேக நபரை ஜூலை மாதம் 12ம் திகதி வரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

## 'ஆங்கிலத்தின் அவசியம்'

சுன்னுகம், ஞாயிறு

''விஞ்ஞானம், மருத்துவம் பொறியியல் ஆகிய துறைகளில் விசேஷ அறிவைப் பெறுவதற்கு ஆங்கில அறிவு அவசியம். மாணவர்கள் ஆங்கிலம் கற்பதில் மேலும் ஆர்வம் காட்ட வேண்டும்.''

ஏழாலை மகாவித்தியாலயத்தில் ஆங்கில தினம் வெகுவிமரிசையாககொண்டாடப்பட்டபோது கல்லூரி அதிபர் திரு. பொ. கனகசபாபதி பேசுகையில் குறிப்பிட்டார்.

ஆசிரியர் த. கந்தசாமி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் செல்வன் சி. கமலராசா வரவேற்புரை கூறினுர். (குவிம)

## கல்லூரி விளையாட்டுப் போட்டி

வாழைச்சேனை, ஞாயிறு

மட்டக்களப்பு வந்தாறுமூலை மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி ஜூலை மாதம் 10-ம் திகதி கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

நான்கு இல்லங்களுக்கிடையே நடைபெறும் போட்டி ஒழுங்குகளை விளையாட்டுப் பொறுப்பாளர் திரு சி. எஸ். பாக்கியம் செய்துவருகிறுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

நாம விரும்பும் படி எதுவும் நடவாவிடில், கடவுள் மீது நம்பிக்கை குலேகிறது. ஆனல் பொறுமையுடன் இருந்து பார்ப்பின், கடவுள் எப்போதும் நன்மையே செய்கிருர் என்பதை நாம் உணர முடியும். —சுவாமி ராமதாஸ்

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: "ELLANADU" Jaffna.
Post Box: 49 Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆனி மாதம் 15-ந்திகதி (29-6-70)

## கனிஷ்ட பல்கலைக்கழகங்கள்

யாழ்ப்பாணம் உள்ளிட்டு தீவிலே 6 இடங்களில் கனிஷ்ட பல்கலைக்கழகங்களை சென்ற வருடத்தில் முன்னுள் கல்வி அமைச்சர் ஆரம்பித்தார். அக்கல்லூரிகளை கைத்தொழில் பயிற்சிக் கல்லூரிகளாக மாற்றும் திட்டத்தை புதிய கல்வி அமைச்சரும் கல்வி நிரந்தரக் காரியதரிசியும் ஆராய்து வருவதாக ஒரு செய்தி தெரிவிக்கின்றது. இந்த மாறுதலால் ஏற்படக் கூடிய பலாபலன்கள் எப்படியிருந்தாலும், சம்பந்தப்பட்டவர்களுக்கு எவ்வித பாதகமும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டியது புதிய ஆட்சியாளரின் பொறுப்பாகும் யாழ்ப்பாணத்திற்கு ஒரு பல்கலைக்கழகம் வேண்டும் என்று கேட்ட போது பலாலியில் ஒரு கனிஷ்ட பல்கலைக் கழகம் அளிக்கப்பெற்றது. ஆனல் இது வெறும் கண் துடைப்பேயாகுமென்றும் அங்கு மாணவர்களைவிட ஆசிரியர் எண்ணிக்கையே அதிகமென்றும் உயர்தர கல்வி எதுவும் அளிக்கப்படவில்லையென்றும், சில தொழில்களுக்கான சாதாரண பயிற்சியே அங்கு அளிக்கப்படுவதாயும் கூறப்படுகின்றது அங்கு படிக்கும் மாணவ மாணவிகளுக்குப் போதிய வசதிகள் செய்யப்பட்டதாகவும் தெரியவில்லை. பள்ளிப் படிப்பு மட்டும் படித்த இளைஞர்களுக்கு ஏதாவதொரு தொழிலில் பயிற்சி அளிப்பது நல்லதுதான். இதை அடியோடு ஒழித்துவிடாமல், கைத்தொழில் கல்லூரிகளாக மாற்றப்போவதாகத் தெரிகிறது. அதன் அமைப்பு எப்படி இருக்குமென்பது இனித்தான் தெரியும்.

அக்கல்லூரிகளில் இப்போது படிப்பிக்கும் ஆசிரியர் சங்கத்தார், புதிய கல்வி அமைச்சரை சந்தித்து இது பற்றி தங்கள் கருத்தை விளக்கியுள்ளனர் இக்கல்லூரிகளை திருத்தியமைக்க வேண்டுமென்பது அவர்களது யோசனை இவ்வித ஸ்தாபனங்கள் நடப்பது, அங்கு படித்துப் பயிற்சி பெறும் மாணவ மாணவிகளுக்காகத்தான். ஆகவே அவர்களின் பிரதிநிதிகளும் அமைச்சரை நேரில் கண்டு பேசி, தங்களது தேவைக்கான யோசனைகளைக் கூறுவது நல்லது. ஆசிரியர், மாணவர் சங்கத்தார் கூறும் யோசனைகளை அமைச்சர் கேட்டறிந்து, மாணவர்களின் மேலான நன்மைக்கான முறையில் தக்க ஏற்பாடுகளைச் செய்வாரென்றும், அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வரமாட்டாரென்றும் எதிர்பார்ப்பது மிகையல்ல,

பட்டதாரி மாணவ மாணவிகளில் பல்லாயிரம் பேர்கள் வேலையில்லாமல் சங்கடப்படுகின்றுர்கள். வேலைவாய்ப்புக்கான முறையில் கல்வி ஸ்தாபனங்கள் இருந்தாலே, வாலிபர்களின் பிரச்னைகள் குறையக்கூடும். நாட்டின் சுயதேவைப் பூர்த்திக்கான முறையில் பல கைத்தொழில்களுக்கான உயர்தரக்கல்வியையும் பயிற்சியையும் அளிக்க இங்கு அதிக இடமுண்டு அதற்கான முறையில் இந்த ஸ்தாபனங்களைத் திருத்தியமைப்பதாயின் அதுவரவேற்கத் தக்கதே. ஈழத்திலே மனித சக்தி அதிகமுண்டு அந்தச் சக்தியைக் கூடுமானவரை பயன்படுத்தும் அடிப்படையிலேயே தொழில் பயிற்சி இருக்கவேண்டுமேயன்றி, இயந்திர சக்தியில் அதிகம் முன்னேறியுள்ள பற்ற நாடுகளைப் பார்த்து அப்படியே 'கொப்பி' அடிப்பது கூடாது. வேலையில்லாக்கஷ்டம் தீருவதற்கான முறையிலேயே தீர்க்கதரிசனத்துடன், நம் நாட்டுக்குத் தேவையான முறையில் இக்கல்வி முறையிருத்தல் அவசியம்,

# 'வடக்கில் மக்கள் சபையை நியமனம் மூலமே அமைப்போம்'

## சமசமாஜகட்சி பிரமுகர் கூறுகிறுர்

கைதடி, சனி

'வட பகுதியில் மக்கள் சபை அமைக்கும் போது பெரும்பாலும், நியமனத்தின் மூலமே அமைப்போம் தேர்தல் மூலம் அமைக்க முற்பட்டால் பழையபடி பிற்போக்கு வாதிகளே மக்கள் சபையிலும் இடம் பெறக் கூடும். கிராமங்கள் அபிவிருத்தி விஷயங்களையும், அரசாங்க இலாகாக்களில் வேலைகளை துரிதப்படுத்துவதையும், மக்கள் சபை கவனிக்கும்'.

கைதடி சமசமாஜக்கட்சி கிளையின் பத்தாவது ஆண்டு விழாவில், பிரதம அதிதியாக கலந்து கொண்டு, உரையாற்றிய வடபிரதேச சமசமாஜக் கட்சி அமைப்பாளரும், யாழ்மாநகரசபைஉறுபினருமான திரு ஏ. விஸ்வநாதன் பேசும்போது மேற்கண்டவாறு கூறினுர்.

கைதடி தெற்கிலுள்ள கல்விக் கழக மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவுக்கு திரு வி. பொன்னம்பலம் தலைமைதாங்கினுர். திரு ஏ. விஸ்வநாதன் மேலும் கூறியதாவது:

கூட்டுக்கட்சியினரை, மக்கள் அமோகமாக ஆதரித்ததற்கு, பலர் பலவித மான காரணங்களைக் கூறலாம். உண்மையான இலங்கை ஒரு சோஷலிசக் குடியரசு நாடாகத், தொழிலாளர் முன்னேற வேண்டுமென்ற நோக்கிற்காகவே மக்கள் எமது கூட்டு முன்னணியை ஆதரித்தார்களே யன்றி, வேறென்று மில்லை.

தென்னிலங்கையிலுள்ள சாதாரண தொழிலாளி, விவசாயிகள்' மககள் அரசாங்கம், நமது அரசாங்கம் என்று சந்தோஷப்படுவதை நாம் இன்று காணலாம், வடபகுதி மக்களைப் பொறுத்தமட்டில் இது மக்கள் அரசாங்கம்', என்று நமது அரசாங்கத்தின் நோக்கை மக்களுக்கு எடுத்துக் காட்டுவதற்காக தேவையில்லாது இருந்த போதிலும்கூட மந்திரிசபையில் ஒரு தமிழன் முஸ்லீம், பிரதிநிதிகள் சபையில், ஒரு சிறுபான்மைத் தமிழனை அங்கம் வகிக்கச் செய்தும், 'மக்கள் அரசாங்கம் என்ற எண்ணம் இங்குள்ள மக்கள் மத்தியில் குடிகொண்டதாகத் தெரியவில்லை. இதற்குக் காரணம் வகுப்புவாத பிற்...

விடயத்தில் தமிழ்க்கட்சிகள் வீண் விதண்டாவாதம் எழுப்புவதனுல் ஒரு பயனுமில்லை.

### மக்கள் சபை

மக்கள் சபையைப்பற்றி அதிக விடயம் நான்சொல்ல முடியாத நிலைமையில் இருக்கிறேன். காரணம் அது இன்னும் தயாராக்கி முடிக்கவில்லை. இருந்தும் இரண்டொரு குறிப்புக் கூற விரும்புகிறேன்.

அதாவது வடபகுதியில் மக்கள்சபை அமைக்கும் போது பெரும்பாலும் நியமனத்தின் நிமித்தமே அமைப்போம். ஏனெனில் தேர்தல்மூலம் அமைக்க முற்பட்டால் பழையபடி பிற்போக்குவாதிகளே மக்கள்சபையிலும் இடம்பெறக் கூடும். கிராமங்களுக்குத் தேவையான விடயங்களிலும் அரசாங்க இலாகாக்களில் தாமதமாகும் விடயங்களைத் துரிதப்படுத்தும் அதிகாரங்கள் மக்கள் சபைக்குக் கொடுப்போம். கச்சேரி நிர்வாக முறையை முற்றாக மாற்றியமைப்போம் வாழ்க்கைச் செலவைக் குறைக்கவும் நமது அரசாங்கம் பாடுபடும். பரம்பரை ஆதிக்கங்களை முறியடித்து ஏழைகள் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வு உயர்வுக்காக சோஷலிசப் பாதையை நோக்கி முன்னேறுவோம்.

சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணிப் பிரதிநிதியும் சமசமாஜக்கட்சிக் கிளையின் உபதலைவருமான திரு. பொன். செல்லையா பேசும்போது கூறியதாவது: இரு தமிழ்க் கட்சிகளும் சிறுபான்மைத் தமிழரை ஏமாற்றிக் கொண்டே வந்திருக்கின்றன. தங்களின் ஆட்சிமன்றக் கதிரையைக் காப்பாற்றுவதற்கு குறிப்பாகத் தமிழரசுக்கட்சி சிறுபான்மைத் தமிழருக்கு விமோசனமளிப்பதாகக் கூறி ஏமாற்றிவிட்டது. முன்னுள் செனட்டர் நல்லையாவை 'செனட்டர்' ஆக்கியது தமிழரசுக்கட்சிதான், ஆனல் அவரின் பதவி காலியானபோது அந்த இடத்தைச் சிறுபான்மைத் தமிழருக்குக் கொடாமல் விட்டு விட்டார்கள்

விழா முடிவில் பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. வீ. குமாரசாமி, உபதலைவர்; திரு. பி செல்லையா. செயலாளர். திரு. எஸ். இந்திரராசா. உபசெயலாளர்: திரு கே முத்துக்குமாரசாமி, தனுதிகாரி திரு. ஆர். கணேசன் ஆறு பேர் கொண்ட நிர்வாகிகளும் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

## இன்று ஓய்வு பெறும் சிறப்பு வாய்ந்த ஆசிரியர்!



குழந்தையை அன்போடு அணைத்து, நல்ல கல்வியையூட்டி அந்தக் குழந்தைக்கு நல்ல ஞானக்கண்ணைக் கொடுத்து நல்ல பிரஜையாக்குகின்றுன் ஆசிரியன்! குழந்தையின் உள்ளத்தில் தினந்தோறும் எழுகின்றமயக்கங்களைப் போக்கி நல்ல ஒளிவிளக்கேற்றும் ஆசிரியனது பணி உண்மையிலேயே சிறந்த பணியாகும்.

மேற்கூறியவாறு நல்லாசிரி[illegible]குரிய இலக்கணங்கள யாவும் ஒருங்கே அமையப் பெற்றவரே உடும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலை அதிபர் திரு. சுப்பிரமணியம் குமாரசேகரம் அவர்கள் [illegible] தெய்வக்கற்பினளாகிய விஜ[illegible] [illegible]சுமியர்மையாரும் ஏந்... [illegible] ஆண்டுகளாக ஓர் [illegible] செய்யக்கூடிய அரும் பெருஞ் சாதனைகளை இக் குறுகிய காலத்தில்...

## இன்று

உடும்பராய், திங்கள்

உடும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலை அதிபர் திரு சு. குமாரசேகரத்தின் பிரிவுபசார விழா இன்று உடும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலையில் நடைபெறும். திரு ஆ. முத்துவேலு தலைமையில் நடைபெறவிருக்கும் இப் பிரிவுபசார விழாவில் கோப்பாய் எம். பி. திரு ஒ. கதிரவேலுப்பிள்ளை கோப்பாய் கல்வி அதிகாரி திரு வே: சண்முகநாதன் வடஇலங்கைத் தமிழாசிரியர் சங்கத் தலைவர் பண்டிதர் ச. பொன்னுத்துரை உட்படப்பலர் உரையாற்றுவர். இறுதியில் 'தமயந்தி சுயம்வரம் என்னும் நாடகமும் இடம்பெறும்.

— —

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### திங்கள் 29—6—70

(செய்திகள்: காலை 6 45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9 00)

344 மீ அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 கத்தோலிக்கநற்சிந்தனை. 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 சித்திரம், 8-00 நிலையஒலிப் பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை4-25கல்விஒலிபரப்பு 5-00 பிறந்ததின வாழ்த்து. 5-30 மாணவர்மன்றம்.

இரவு 6-10 பேச்சு, 6-15 வாத்திய இசை. 6-30 கிராமசஞ்சிகை, 7 15 பேச்சு, 7-45 நாடகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 உரையாடல், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்தித் தொகுப்பு.

— —

## புதைபொருள் ஆராய்ச்சிக் குழு

யாழ்ப்பாணம், திங்கள்

புதைபொருள் ஆராய்ச்சி வேலைகளை மேற்கொள்ள டாக்டர் விமலா தலைமையிலான அமெரிக்க புதைபொருளாராய்ச்சிக்குழு வரணிப்பகுதிக்குச் சென்றது.

இக்குழுவில் திரு. பரன்பென், திரு. மாறுாப் ஆகியோருடன் யாழ்ப்பாணம்நூதன...

## ஐயாறன் எழுதுவது..

சமீபத்தில் ஒரு தேர்தல் கூட்டத்திலே உடும்பராய் இந்துக்கல்லூரி அதிபர் ஏ. வைத்திலிங்கத்தார் பேசியதாக அறிந்ததும் அரசியலில் கலந்துகொள்ள ஆசிரியர்களுக்கு உரிமை கிடைத்துவிட்டதா? என்று சந்தேகித்தேன். அதிபர் வேலையிலிருந்து இளைப்பாறி விட்டதாக அவர் கூறியதின் பின்தான் விஷயம் எனக்குத் தெரிந்தது:

''ஈழத்திலே கம்யூனிஸ்ட் கட்சியின் மூளை'' என்று சொல்லப்படும் தோழர் ஏ. வைத்திலிங்கம் அக்கல்லூரி அதிபராக இருக்கையில் ஒரு சமயம் நவராத்திரிவிழாவுக்கு என்னை அழைத்திருந்தார். அங்கு பூசை நடந்த பின் அவர் திருநீறை வாங்கி நெற்றியில் இட்டுக்கொண்டார். தமது அரசியல் கொள்கை எதுவாயினும், கல்லூரி விஷயத்தில் அதைச் சற்றும் காட்டாமல் பெற்ருேர்களின் பூரண நம்பிக்கையைப் பெற்று அக்கல்லூரியை பெரிதாகக் கட்டி பலரது பாராட்டுதலையும் நன்றியையும் பெற முடிந்தது பெரிய காரியம். இவர் மாதிரியே எல்லா கம்யூனிஸ்டுகளும் இருந்தால் கம்யூனிசத்தைப் பற்றி யாரும் பயப்படவேமாட்டார்கள்.

பிறரைப் புண்படுத்தும் படி ஒரு வார்த்தையும் பேசமாட்டார். ''கடவுள் தான் இலட்சிய கம்யூனிஸ்ட் பலாத்காரமற்ற கம்யூனிஸத்தை ஆதரிக்கிறேன்'' என்று ஒரு சமயம் மகாத்மா கூறியதை அவரிடம் சொன்னபோது ''பிள்ளையைத் திருத்த பெற்ருேர்களும், ஆசிரியரும் அடிக்கிருர்கள். அது பலாத்காரமாகுமா?'' என்று வைத்திலிங்கத்தார் பதிலளித்தார்.

உடும்பராய் கல்லூரியில் அவரது சேவை நலத்தைப் பாராட்டும் பெரிய விழா நடந்தது. அவரை ஊர்வலமாக அழைத்துச் சென்று வீட்டுக்கு வீடு பூரண கும்பம் வைத்து மரியாதை செலுத்திய வைபவங்களைப் பற்றி நேரில் கண்ட ஓர் அன்ப தெரிவித்தார்.

''ஆட்சிக்கு வந்திருக்கும் சோஷலிச கூட்டணியில் இவருக்கு அதிக செல்வாக்குண்டு. அதைக் கண்டு தமிழ்மக்களுக்குத் தன்ன...

...ணிடம் எந்தப்பொறுப்பான வேலையையும் அளிக்கப் படாது என்று ஒரு சமஸ்கிருத சுலோகத்தைக் கூறியதும் அந்தத் தமிழ்த் தாய்க்கு ஒரே கோபம்வந்து 'ஆணைவிட பெண்தான் எந்த வேலையையும் அதிகபொறுப்புடன் வெற்றியாகச் செய்வார்' என்று பதிலளித்தாராம். பெண் என்றதும் எல்லாப் பெண்களும் ஒன்று சேர்ந்து விடுகிருர்கள்! எப்படியோ இந்தப் பெண்ணரசியின்மீது அமோகமானநம்பிக்கை வைத்துத்தானே அவரைப் பொதுமக்கள் பிரதமராக்கி இருக்கிருர்கள்! அவர் ஆட்சி வெற்றியடைந்தால் எல்லாருக்கும் நல்லது தானே!

0 0

துஞ்சலும் துஞ்சலில்லாத போழ்தினும்
நெஞ்சகம்நைந்து நினை மின் நாடொறும்
வஞ்சகம் அற்று அடிவழ்ந்து வந்தகூற்று
அஞ்ச வுதைத்தன அஞ்செழுத்துமே.
— திருஞானசம்பந்த சுவாமிகள்,

— —

## மூன்று மாத...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

போவில் திரு. அனிலை வரவேற்றனர். பின்னர் அங்கிருந்து திருவாளர்கள் தாமரத்தினம், விசுவநாதன் ஆகியோருடன் கோண்டாவில் டிப்போவுக்கு திரு. அனில் முனசிங்கா வந்து சேர்ந்தார்.

### அலுவலகத்துக்குள் செல்லவில்லை

கோண்டாவில் டிப்போ அலுவலகத்துக்குள் செல்லாமல் டிப்போ வாசலில் நின்ற ஊழியர்களுடனும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடனும் அனில் பேசினுர். அவர்கள் மாலைசூட்டி அவரை வரவேற்றனர்.

கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை, முன்னுள் நல்லூர் எம். பி. டாக்டர் நாகநாதன், பருத்துறை எம். பி. திரு க. துரைரத்தினம் ஆகியோரும் இங்கு திரு. அனில்முனசிங்காவை சந்தித்துப்பேசினர்

இ. போ ச. தலைவர் ஊழியர்கள் மத்தியில் பேசுகையில் கூறியதாவது:-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எப்படி இருக்குமென்பது இனித்தான் தெரியும்.

அக்கல்லூரிகளில் இப்போது படிப்பிக்கும் ஆசிரியர் சங்கத்தார், புதிய கல்வி அமைச்சரை சந்தித்து இது பற்றி தங்கள் கருத்தை 'கொப்பி அடிப்பது கூடாது. வேலையில்லாக்கஷ்டம் தீருவதற்கான முறையிலேயே தீர்க்கதரிசனத்துடன், நம் நாட்டுக்குத் தேவையான முறையில் இக்கல்வி முறையிருத்தல் அவசியம்,

## பிரதமர் இந்திராவின் பெரும் பொறுப்பு

இந்திய பிரதமர் இந்திரா காந்தி நமது மந்திரி சபையில் சிலபெரிய மாறுதல்களைச்செய்திருக்கிறார். இதில்முக்கியமானது உள்துறை அமைச்சை அவர் ஏற்றிருப்பதுதான்இதற்கு முக்கியமான காரணம் இருக்கத்தான் வேண்டும். இன்று இந்தியாவில் வகுப்புக்கலவரங்களும், பலாத்கார நடவடிக்கைகளும் அதிகரித்து, பொது அமைதிக்கு அதிகஆபத்து ஏற்பட்டிருக்கிறது. வெளிநாட்டு ஆபத்தைவிட, உள்நாட்டில் கிளம்பும் இவ்வித கலவரங்களால் அமைதி குலைவதால் தான் ஆபத்து அதிகமென்று சரியாகக்கருதி, பிரதமர் இந்திரா, வெளிவிவகார, பாதுகாப்புப் பொறுப்புகளைப்பிறரிடம் விட்டு விட்டு உள் துறைப் பொறுப்பை ஏற்றிருக்கின்றார். இவ்விஷயத்தில் திரு. தினேஷ்சிங் உள்ளிட்டு எல்லா அமைச்சர்களும் புதிய மாறுதல் விஷயமாக ஒத்துழைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

ஐம்பத்தைந்து கோடி மக்களுள்ள ஒரு பெரிய ஜனநாயக நாட்டின் பிரச்னைகள் மிகவும் பாரதூரமானவை. சில வெளிவல்லரசுகள் தங்கள் கையாட்களை இந்தியாவில் அமர்த்தி, வகுப்புக்கலவரங்களையும், பயங்கரப்புரட்சிகளையும் மூட்டிவிட்டு, இந்தியாவின் அமைதியைக் குலைத்துவருவது பகிரங்கரகசியம். எல்லைப்புறங்களில் எந்த சமயம் போர்மூளுமோ என்ற ஸ்திரமற்றநிலை வேலையில்லாக்கஷ்டம், உணவுப்பஞ்சம் பட்டினி முதலிய தீராத பிரச்னைகள் இவற்றையெல்லாம் ஒரு பெண் பிரதமர் எதிர்நின்று சமாளித்துவருவதற்கு அசாதாரண துணிச்சல் வேண்டும். தன்கட்சியின் பலம் திடீரெனக் குறைந்தாலும் பல நண்பர்கள்எதிரிகளாகமாறினாலும், பிரதமர் இந்திரா மனத்தைரியத்தையும் உறுதியையும் இழக்காமல் ஆட்சிநடத்தி, மிகக் கஷ்டமான பொறுப்புகளைதாமே ஏற்க முன்வந்துள்ளார்'

இத்துடன் ஒப்பிடுகையில் இலங்கையிலே ஸ்ரீமாவின் நிலைமை அதிக சுலபமானது. ஸ்ரீமாவுக்கு பார்லிமெண்ட்சபையிலே அசைக்க முடியாத பெரும்பான்மை பலம் கிடைத்திருக்கிறது. பொதுத்தேர்தல்மூலம் பொதுமக்கள் அளித்துள்ள இந்தப் பலம், ஸ்ரீமாவுக்குவிசேஷ உற்சாகமும், பல சிக்கலான பிரச்னைகளையும் தீர்ப்பதற்கான வாய்ப்பையும் அளித்துள்ளது. இந்தியாவில் மற்றக்கட்சிகள் திருமதி இந்திரா காந்திக்குப் போதிய ஒத்துழைப்பை அளிக்க மறுப்பின் அவரும் பார்லிமெண்ட் சபையைக் கலைத்து பொதுத்தேர்தல் நடத்துவதைத்தவிர வேறு வழியில்லை. இந்நிலையில் அவரை விட்டால், இந்தியப் பொதுமக்களின் நம்பிக்கைக்குரிய வேறு தலைவர் யாருமில்லையாகையால், அவருக்கும் இலங்கையின் ஸ்ரீமாவைப்போல் அமோகமான வெற்றியும் அரசியல் பலமும் பெறுவாரென்பதில் ஐயமில்லை.

## நிதி மந்திரிக்கு பாராட்டு

வாழைச்சேனை ஞாயிறு

'சோஷலிச அரசாங்கத்தை ஏற்படுத்தி தொழிலாளர்களின் இழந்த உரிமைகளைப் பாதுகாப்பதற்காக நீங்கள் எய்தியுள்ள வெற்றிக்காக உங்களை நாங்கள் பாராட்டுகிறோம்.'

இவ்வாறு கிழக்கிலங்கைக் கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனத்தின் ஐக்கிய அரசாங்கக் கூட்டுத்தாபன வர்த்தக ஊழியர் சங்கச் செயலாளர் திரு என். சுப்பிரமணியம் சங்கத்தின் சார்பில்நிதி அமைச்சர் டாக்டர் என் எம் பெரேராவுக்கு விசேஷ தந்திச் செய்தியொன்றை அனுப்பி வைத்திருக்கிறார்.

பிரதிநிதிகள் சபையில், ஒரு சிறுபான்மைத் தமிழனை அங்கம் வகிக்கச் செய்தும், 'மக்கள் அரசாங்கம் என்ற எண்ணம் இங்குள்ள மக்கள் மத்தியில் குடிகொண்டதாகத் தெரியவில்லை. இதற்குக் காரணம் வகுப்புவாத பிற்போக்குக் கட்சிகள் இங்கு ஆதிக்கம் பெற்றிருப்பதே 'ஏழை மக்களின் அரசாங்கம்'' 'நமது அரசாங்க' 'மக்கள் அரசாங்கம்' என்பதை வடபகுதி மக்களைப் புரிந்துகொள்ள வைப்பதற்கு இப்படிப்பட்ட வாலிவர் சங்கங்களின் ஒத்துழைப்பும் சேவையும் மிக அவசியம்.

### ஏழை மக்கள் பாதிப்பு

இதுவரை காலமும் வடபகுதியில் ஆதிக்கத்தில் இருந்து வரும் பிற்போக்கான குறுகிய மனப்பான்மையுடைய இரு தமிழ் கட்சிகளையும் எடுத்துப்பாருங்கள் பொது மக்களுக்கு ஒன்று கூறுவதும் தாங்கள் வேறொன்று செய்வதுமாக ஏழைகளை ஏமாற்றுகிறார்கள். உதாரணமாக ஒன்றைமட்டும் குறிப்பிட விரும்புகிறேன். அதாவது இலங்கையில் அரசகரும மொழியாக தனிச் சிங்களத்தை இவர்கள் ஏற்றுக்கொண்ட போதிலும், தமிழ்ப்பாடசாலைகளில் சிங்களத்தை போதிக்க விடாது தடைபண்ணிக்கொண்டு மறுபுறம் தங்களின் பிள்ளைகளுக்கு அவர்களைச் சார்ந்த பணக்காரர்களின் பிள்ளைகளுக்கும் சிங்கள போதனை கொடுப்பதை நாம் இன்றும் காணலாம். தனிப்பட்ட முறையில் சிங்களம் கற்க முடியாத ஏழை மக்களின் பிள்ளைகள தனித் தமிழையே படிக்க வேண்டி நேரிடுகிறது. இதனால் வருங்காலத்தில் அரசாங்க இலாகாக்களில் பணக்காரர்களின் பிள்ளைகள தான் சேர வாய்ப்பாகும். ஏழைக்கன்ன் பிள்ளைகள் சேர முடியாத நிலை ஏற்படும். எனவே ஏழைகளாகிய நாம் சோஷலிசப் பாதையில் முன்னேறத்தயாராக இருக்க வேண்டும்.

### போதனா மொழி

பெற்றோர் விரும்பும் மொழியே போதனா மொழியாக இருக்கும். ஒரு தமிழன் தனது பிள்ளைகள் தமிழைவிட வேறுமொழியைத் தனது பிள்ளை போதனா மொழியாகக் கொள்ள விரும்புவானா? அப்படி விரும்பினால் அவன் தமிழன் அல்ல. தமது கலை, கலாச்சாரத்தை விரும்பாத தமிழ்ப் பெற்றோர்கள் உண்டா? அப்படித்தான் சிங்களவர் மத்தியிலும். ஆகவே போதனாமொழி

யாவும் ஒருங்கே அமையப் பெற்றவரே உடும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலை அதிபர் திரு. சுப்பிரமணியம் குமாரசேகரம் அவர்கள் தெய்வக்கற்பினளாகிய விஜயலட்சுமியர்மையாரும் ஏந்தல் சுப்பிரமணியம் அவர்களும் செய்துகொண்ட நற்றவத்தால் சரித்திரப் பிரசித்திவாய்ந்த மாவிட்டபுரத்தில் தோன்றிய புண்ணிய புருஷரான திரு. குமாரசேகரம் அவர்கள இளமையிலேயே தமிழ் ஆங்கிலம் ஆகிய இரு பாஷைகளையும் கற்றுத் துவிபாஷா விற்பன்னராகத் திகழ்ந்தார்.

ஆரம்பத்தில் அரசினர் இலாகாவில் திரு. குமாரசேகரம் அவர்களுக்கு உத்தியோகம் கிடைத்திருந்த போதிலும், சில நாட்களிலே அவ்வுத்தியோகத்தை உதறித் தள்ளிவிட்டு நல்லாசிரியரானார், 1-6-30-ல் காங்கேசன்துறை ஏ. சி. எம் ஆங்கில பாடசாலையில ஆசிரியரான திரு குமாரசேகரம் அவர்கள் இன்றுவரை தமது ஆசிரியப்பணியைத் தூய பணியாயே ஆற்றிவந்திருக்கிறார்கள்

திரு குமாரசேகரம் ஆசிரிய வாழ்வில் 1-9-41 தொடங்கி 15-6-66 வரையும் உள்ள காலம் பொற்காலமாகும் இந்த இருபத்தைந்து ஆண்டுகளும் சைவத்துக்கும் தமிழுக்கும் அரசியலுக்கும் திரிகரணசுத்தியுடனும் தம்மையே அர்ப்பணித்த வள்ளல் சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களால் அமைக்கப் பெற்ற பரமேஸ்வராக கல்லூரியில் திரு குமாரசேகரம் அவர்கள் நல்ல உதவி ஆசிரியராயும், சிறந்த தலைமை ஆசிரியராயும் பெரும்பணி புரிந்தார

1950-ம் ஆண்டு பரமேஸ்வராக கல்லூரியில் நடைபெற்ற 'தமிழ்விழா' உலகப் பிரசித்தமான ஒரு தமிழ் விழாவாகும். இந்திய ஈழத் தறிஞர்கள் பலரும் கலந்து கொண்ட இவ்விழா மிகவும் சிறப்பாக நடைபெற ஒத்தாசை புரிந்தவர்களில் திரு குமாரசேகரமும் ஒருவராவர் என்பது குறிப்பிடத்தககது

திரு குமாரசேகரம் பரமேஸ்வராக கல்லூரியில் ஆற்றிய நற்பணியையும் அவரது உரும்பராய்த் தொடர்பையும் உணர்ந்த உரும்பராய்ப் பெருங்குடி மககளது வேண்டுகோளுககு இணங்க 16-6-66-ல் உடும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலையின் அதிபரானார்

உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலையில் நான்கு ஆண்டுகளுக்கு மேல் அதிபர் பதவியை வகித்த திரு. சு. குமாரசேகரம் அவர்கள,



நாற்பது ஆண்டுகளாக ஓர் அதிபர் செய்யக்கூடிய அரும் பெருஞ் சாதனைகளை இக் குறுகிய காலத்தில் நான்கு வருடங்களில் சைவத்தமிழ் வித்தியாசாலையில் நிலைநாட்டினார் உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாசாலையின் புதிய கட்டிட வளர்ச்சியின் விரைவை யாம் சினிமாவிலே கூடப்பார்க்க முடியாது.

கல்வித்துறையில் உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலையின் சிறப்புவாய்ந்த அதிபரான திரு. சு. குமாரசேகரம் அவர்களது சஷ்டியப்த பூர்த்தி விழா இன்று சிறப்புற நிறைவேற எல்லாம்வல்ல இறைவன் திருவருள் புரிவாராக.

— அ. பஞ்சாட்சரம்.

டாக்டர் விமலா தலைமையிலான அமெரிக்க புதைபொருளாராய்ச்சிக்குழு வரணிப்பகுதிக்குச் சென்றது.

இக்குழுவில் திரு. பரன்பென், திரு. மாறூப்ஆகியோருடன் யாழ்ப்பாணம்நூதனசாலை உதவிஅதிபர் திரு செல்வரத்தினமும் சென்றிருந்தார்.

சரித்திரத்துக்கு அப்பாற்பட்ட உண்மைகளையும் சமூக மானிட வியல்களையும் இக்கோஷ்டியினர் துருவி ஆராய்ச்சி செய்யுமென அறியப்படுகிறது.

வரணி மாப்பாணர்வளவு, நுணுவில் பூதராயர் வளவு ஆகிய இடங்களை இக்கோஷ்டியினர் ஆராய்ந்து புராதன விடயங்களைப் பெற்றுள்ளனர். பொதுமக்களுடன்சகசமாகப் பழகும் இவர்களுக்கு பொதுமக்களும் உதவிசெய்துள்ளனர். (கு வி ம

## கோப்பாய் எம்.பிக்கு 'சிவபக்த சிகாமணி'!

## மதுரை ஆதீன பட்டமளிப்பு

மதுரை, ஜூன் 28

மதுரை ஆதீனகர்த்தர் குருமகா சந்நிதானம் கோப்பாய் எம். பி. திரு எஸ். கதிரவேலுப்பிள்ளைக்கு சிவபக்த சிகாமணி' என்ற பட்டத்தை வழங்கிக்கௌரவித்துள்ளது.

வருடாவருடம் குருபூசையின்போது பிரமுகர்களது சேவையைப் பாராட்டி வழங்கப்படும் இந்தக் கௌரவப்பட்டம்இம்முறை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களுக்கும் வழங்கப்பட்டுளளது. விபரம் வருமாறு:

பிரஹ்மஸ்ரீ கே. கைலாசநாதக்குருககள் சமஸ்கிருத பேராசிரியர் சர்வகலாசாலை பேராதனை ''வேதாகமஞான பானு''

நவாலி அட்டகிரி தேவஸ்தானம் பிரம்மஸ்ரீ விஸ்வநாதக் குருககள் ''சிவாகம சிரோமணி''

யாழ். உதவி மேயர் திரு ஆ. துரைராஜசிங்கம், ''சிவநெறிச் செம்மல்''

வழக்கறிஞர் திரு. சூரசங்காரம் ''சிவபக்தமாமணி''

கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினர்திரு எஸ். கதிரவேலுப்பிள்ளை ''சிவபக்த சிகாமணி''

புரக்டர் விஸ்வலிங்கம் ''சிவபக்த செம்மணி''

புரக்டர் கனகரெட்ணம் ''சிவ்பக்த சிரோமணி''

திரு, கனகராஜா (மில்கவைற் சோப் அதிபர்) ''சிவநெறிப் புரவலர்'

திரு. சோ. இராஜரெட்ணம் செட்டியார் ''சித்தாந்த வித்தகர்''

திரு. சிற்றம்பலம் ''சிவதர்மபுரவலர்''

### நானும்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளதை வரவேற்கிறோம் ஆனால் தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஒருவர் மந்திரிசபையில் பிரதிநிதித்துவப்படுத்தப்படாததால், அரசாங்கம் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கருதமுடியாது?என்று கூறி செனட்டர் நடராசா தனது பேச்சை முடித்தார்.

தபால் மந்திரி திரு குமாரசூரியர் பேச ஆரம்பித்த போது செனட்சபை கலைக்கப்பட்டது. மீண்டும் நாளை செனட்சபை கூடும்.

## சுகததாசா குற்றச்சாட்டு

கொழும்பு, ஞாயிறு

முன்னாள் தேசிய சேவை அமைச்சர் திரு.வி.ஏ. சுகததாசா கொழும்பு மாநகர சபைக்குச்சொந்தமான நிலத்தை விற்றதுபற்றி விசாரணைசெய்வதற்காக கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது வீடமைப்பு அமைச்சர் திரு. பீட்டர்கெனமன் இக் குழுவை நியமித்துள்ளார்.

முன்னைய தேசிய அரசாங்கம் பதவியிலிருந்த காலத்தில் காணி நீர்ப்பாசன அமைச்சர் திரு. சி. பி. டி. சில்வா தலைமையில் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு அறிக்கையைச் சமர்ப்பிக்காததால் இந்த நடவடிக்கையைப்புதிய அரசாங்கம்மேற்கொண்டுள்ளது. (சி)

பற்றி நேரில் கண்ட ஓர் அன்பர் தெரிவித்தார்.

''ஆட்சிக்கு வந்திருக்கும் சோஷலிச கூட்டணியில் இவருக்கு அதிக செல்வாக்குண்டு. அதைக் கண்டு தமிழ்மக்களுக்குத் தன்னாலான சேவையைச் செய்து கொடுக்க முன்வரவேண்டும்'' என்று அக்கூட்டத்தில் ஓரன்பர் கேட்டுக் கொண்டார். தமிழரசுக கட்சி எம், பி. கதிரவேற்பிள்ளையும் இவரது சேவையைப் பாராட்டினார்.

இப்போதுள்ள கூட்டணி அரசாங்கததில் முழு நம்பிக்கை வைத்து ஒத்துழைத்தால் தமிழர் நல்வாழ்வுவாழ முடியும் என்று உறுதி கூறினார் வைத்திலிங்கம கல்விச் சேவைக்கு ஏற்பட்டுளள நஷ்டம் இனி நாடனைத்துக்கும் சிறப்பாக தமிழ்ச் சமூகத்துக்கும் லாபமாகட்டும்

இப்போது வீட்டுக்குவீடு கோயில், ஆபீஸ் எங்கும் ஸ்ரீமாவைப்பற்றித்தான் பேச்சு. கொழும்பில் ஒரு கோயிலுக்கு வழிபடவந்த ஒரு தமிழ்த்தாய் யூ.என் பி ஆதரவாளர். அது தோற்றதால் நாட்டுக்கே பெருநஷ்டம் என்றாராம். இதைக் கேட்டிருந்த ஓரன்பர் பெண்

...ரும் இங்கு திரு. அனில்முனசிங்காவை சந்தித்துப்பேசினர்

இ. போ ச. தலைவர் ஊழியர்கள் மத்தியில் பேசுகையில் கூறியதாவது:-

''கடந்த 5 ஆண்டுகளில் அரசாங்கத்திடம் 500 லட்சம் ரூபாவை இ.போ ச.கடனக வாங்கியுள்ளது. இந்தப் பணத்தின்மூலம் இந்நாட்டில் பெரிய தொழிற்சாலைகளை அமைத்து ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை வழங்கியிருக்கலாம். இந்நிலைமை இனியும் நீடிக்காது. நீடிக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டியது இ. போ. ச. பாதுகாவலர்களின் கடமையாகும்.

### பேதம் கூடாது

'தமிழர் சிங்களர் என்ற பேதம் ஊழியர்களிடையே பாராட்டப்படக்கூடாது. கடமையை உணர்ந்து சேவையை சரவரச்செய்ய வேண்டும். எல்லோருமே ஊழியர்கள் என்பதை உணர்ந்து உள்ளத்தாலும், உணர்வாலும், செயலாலும் சேவையாற்றவேண்டும்.

இ போ ச டிப்போக்களில் உருவாக்கப்படும் தொழிலாளர் கமிட்டிகள் பற்றி தமது பேச்சில் முக்கியமாகக்குறிப்பிட்டார்.

## தொழிலாளர் ...

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

கத்தில் உத்தியோகத்தர்களுக்கு உதவியாக இருந்து ஆலோசனை வழங்கும்.

தொழிலாளர் சபைக்குத் தெரிவு செய்யப்படுபவர்கள் தகுதியானவர்களாக இருக்க வேண்டும். நேர்மையானவரும் கண்ணியமானவரும் தெரிவு செய்யப்படவேண்டும். அப்பொழுதுதான் நிர்வாகம் நல்ல முறைப்படி நடக்கும்.

தொழிலாளர் சபை நிறுவப்படும்வரை தொழிலாளர் ஒற்றுமையாக கடமையாற்றி இ. போ. சபைக்கு லாபம் வரக்கூடிய விதத்தில் நடந்து கொள்ளவேண்டும். லாபத்தின் பெரும் பங்கு தொழிலாளர்களுக்குசேரும் கட்சி பேதம் பாராட்டாது தொழிலாளர்கள் ஒற்றுமையாகக் கடமையாற்றவேண்டும்.

தொழிலாளர் சபையில் சகல தொழிற்சங்கங்களையும் சேர்ந்த பிரதிநிதிகள் இடம்பெறவேண்டும். அப்படியானால்தான் ஒற்றுமையாக நிர்வாகத்தை நடத்த முடியும். தொழிலாளர் சபை நிறுவப்பட்ட பின் நிர்வாகம் நல்லமுறையில் நடைபெறுமென்ற நம்பிக்கை எனக்குண்டு.

தொழிற்சங்கங்கள் ஒற்றுமையாக இயங்கினால்தான் பொதுமக்களுக்கு நல்ல சேவையை வழங்கமுடியும்

### தொழிலாளர் கமிட்டி

''தொழிலாளர் கமிட்டிகள் இ போ ச நிர்வாகத்தை நடாத்துவதென்ற தப்பான கருத்து தலைதூக்கக் கூடாது. இதனை தொழிலாளர்கள் நன்குணரவேண்டும். தொழிலாளர்கள் பிரச்னை பற்றி தெரிவிக்கவும், தொழிலாளர்களுக்கு தேவையான சலுகைகளைப் பெறவும், ஆலோசனைகள் கூறவுமே இந்தச் சபைகள் தெரிவுசெய்யப்படுகின்றன. இரகசிய வாக்கெடுப்பின் மூலமே இந்தச்சபைகள் தெரிவுசெய்யப்படும் இருமாதத்துக்கு பின்னரே தொழிலாளர் கமிட்டிகள் நியமிக்கப்படும்.''

திரு. அனில்முனசிங்கா நேற்றுக்காலை11-30மணிக்கு பலாலியிலிருந்து கொழும்புக்கு விமானத்தில் திரும்பினார்.

## சேர்ச்சில் மகள் வழக்கு!

மிலான், ஜூ 28

காலஞ்சென்ற பிரிட்டிஸ் பிரதமர் சேர்ச்சிலின் மகள் சாரா சர்ச்சில் ஒரு சஞ்சிகை மீது அவதூறு வழக்கு தாக்கல் செய்வதற்காக நேற்று கோர்ட்டுக்கு வந்தார்.

இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஜூன் மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org